

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 56 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 18 – வியாழக்கிழமை 05 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 56: Thiruvalluvar Year - 2054 - Purattasi 18 - Thursday 05 October 2023 - Trichy ★★ 10 Pages ₹5.00

## சமூக ஊடகங்களில்

# பொய்ச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்திடுவீர்!

## மாவட்ட ஆட்சியர் - காவல்துறை அலுவலர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக். 5-**

**“சமூக ஊடகங்களில் பொய்ச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுத்திடுவீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சியர் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் நமது அரசு பொறுப்பேற்று நடைபெறக்கூடிய இந்த இரண்டாவது மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில், உங்கள் அனைவரையும் ஒருசேர சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முன்னதாக, கடந்த ஆண்டு மார்ச் 10 அன்று மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மாநாடு நடந்தது.

‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்ட போதும் மாவட்ட ஆட்சியர்களை காவல்துறை கண்காணிப்பாளர்களை நான் சந்தித்து இருக்கிறேன். தொடர்ச்சியாக உங்களை நான் சந்தித்து வருகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், நாம் பல்வேறு ஆலோசனைகளை மேற்கொள்ளவிருக்கிறோம். இங்கே கூடியுள்ள நீங்கள் அனைவரும் அரசுக்கு உங்களது ஆலோசனைகளை, எந்தவித தயக்கமுமின்றி, மக்கள் நலன் ஒன்றையே மையமாகக் கொண்டு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று காலையில் நடைபெறும் இந்த அமர்வில் சட்டம்ஒழுங்கு பராமரிப்பு குறித்து நாம் விவாதிக்க இருக்கிறோம்.

**மக்கள் நலன் குறித்து ஆலோசனை வழங்கிடுவீர்!**

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைதியை ஏற்படுத்திக் காட்டுவது முதலாவது இலக்கு!

இரண்டாவது, பொது அமைதியைக் கெடுக்க நினைப்பவர்களை முழுமையாகத் தடுப்பது.

அமைதியான தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முடியுமா என்று திட்டமிடுபவர்களுக்கு இடமளித்துவிடக் கூடாது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதால் அந்த உள்நோக்கத்துடன் இத்தகைய சக்திகள் செயல்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதனை தீவிரமாகக் கண்காணித்து தடுக்க வேண்டும்.

கள்ளச்சாராயம், போதைப் பொருட்களை அறவே ஒழிக்க வேண்டும்! இது நம் எதிர்காலத் தலைமுறையையே சீரழிக்கிறது. இது சம்பந்தமான குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

மேலும், சாலை விபத்துகளால் மிக அதிக அளவில் உயிரிழப்புகள் ஏற்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருப்பது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. இந்த நிலையை மாற்ற காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து திட்டங்களை வகுத்து, விபத்துகளைக் குறைப்பது குறித்து ஆய்வு செய்திடும் முயற்சியிலே முழுமையாக ஈடுபட வேண்டும்.

**போக்குவரத்து நெரிசலை குறைக்க சிறப்பு திட்டம்!**

சென்னை உள்ளிட்ட பல மாநகரங்களில் பொதுமக்களுக்கு சிரமம் தரக்கூடிய ஒன்றாக இருப்பது போக்குவரத்து நெரிசல். அதனைக் குறைப்பதற்கான ஒரு சிறப்பு செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் நடவடிக்கை எடுப்பதில் துளியும் சமரசம் இருக்கக் கூடாது. குற்றவாளிகளை உடனே கைது செய்து, தண்டனை

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

# கலைஞர் இதயத்தில் எனக்கென்று தனி இடம் இருந்தது!

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று பல்வேறு தலைப்புகளில் ‘முரசொலி சிறப்பிதழ்’ வெளியிட்டு வருகிறது. இதனையொட்டி இம்மாதம் (அக்டோபர்) “தமிழ்த்திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில் சிறப்பிதழ் வெளிவருகிறது.**

**இச்சிறப்பிதழுக்காக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் எழுதிய சிறப்புக் கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

**சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்**



நான் மிகவும் மதிக்கும் அமரர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தருணத்தில் நான் அவரைப் பற்றி ஒரு கட்டுரை எழுத முரசொலி பத்திரிகை அலுவலகத்திலிருந்து திரு.செல்வம் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்.

கலைஞரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். திரு. எஸ்.பி. முத்துராமன் அவர்கள் கலைஞரைப் பற்றி நிறைய விஷயங்களை எனக்கு சொல்லியிருக்கிறார். திரு. எஸ்.பி.முத்துராமன் அவர்களின் தந்தை திரு. ராம சுப்பையா அவர்கள் திராவிட கட்சியின் தீவிர விசுவாசியாக இருந்தவர். அண்ணா, கலைஞர் மற்றும் பல தலைவர்கள் செட்டிநாடு சென்றால் திரு.ராம சுப்பையா அவர்களின் வீட்டில் தான் தங்குவார்கள். அங்குதான் பல ஆலோசனைகள் மற்றும் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். திரு.எஸ்.பி.முத்துராமன் அவர்கள் கலைஞரைப் பற்றி சொல்ல சொல்ல அவர் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் அதிகமானது.

தமிழ் திரை உலகின் இரண்டு ஜாம்பவான்களான திரு. சிவாஜி கணேசன் அவர்களும் மற்றும் திரு.எம்.ஜி.ஆர் அவர்களும் புகழின் உச்சிக்குச் செல்ல முக்கியமான காரணமாக இருந்தவர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் எழுதிய “பராசக்தி” படத்தின் அற்புதமான, சமுதாய சீர்திருத்தும், புரட்சிகரமான வசனங்களை உணர்ச்சிகரமாக பேசி, நடித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரே நாளில் உச்ச நட்சத்திரம் ஆனார். மதிப்பிற்குரிய திரு.எம்.ஜி.ஆர். அவர்களுக்கு “மருத நாட்டு இளவரசி”, “மந்திரி குமாரி”, “மலைக்கள்ளன்” போன்ற படங்களுக்கு வசனம் எழுதி அந்தப் படங்களை மிகப்பெரிய வெற்றிப்படங்களாக்கி திரு.எம்.ஜி.ஆர் அவர்களை நட்சத்திரமாக மாற்றினார்.



1977 ஆம் ஆண்டு என்னுடைய TMU 5004 பியட் காரில் மியூசிக் அகாடமி பக்கம் ஒட்டிக் கொண்டிருந்தேன். பின்னால் ஒரு வண்டி வந்துகொண்டிருந்தது. வண்டியில் வந்துகொண்டிருந்தவரை என் கார் கண்ணாடி மூலம் உற்றுப்பார்த்தேன். நன்கு தெரிந்த முகம். கண்ணில் கருப்புக் கண்ணாடி கலைஞர் என்று தெரிந்தது. நான் அப்படியே இடது பக்கமாக ஒதுங்கி வழி விட்டேன். எனது காரை கடக்கும் போது அவர் என்னைப் பார்த்து அன்புடன் சிரித்து கைகளை ஆட்டினார். காரில் என்னைப் பார்த்து அன்புடன் சிரித்த அந்த சிரிப்பு என் வாழ்க்கையில் மறக்க முடியாதது. அதுதான் நான் கலைஞர் அவர்களை முதல் முதலில் பார்த்தது.

நான் 1980-ல் ஒரு திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தேன். அந்த திரைப்படத்தின் தயாரிப்பாளர் கலைஞர் அவர்களின் நண்பர் மற்றும் அவருக்கு மிகவும் நெருக்கமானவர். அந்தத் திரைப்படத்தின் வசனங்கள் தயாரிப்பாளருக்கு திருப்தி தரவில்லை. படம் ஆரம்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னால் தயாரிப்பாளர் என்னிடம் வந்து “நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான விஷயத்தை சொல்கிறேன்… நம் படத்துக்கு கலைஞர் அவர்கள் வசனம் எழுத ஒப்புக் கொண்டார்” என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எளிமையான தமிழ் வசனங்களை பேசி நடிப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கும் நான் கலைஞரின் வசனங்களை பேசி நடிப்பதா ??? நடக்காத காரியம்… இதற்கு நான் கர்நாடகாவிற்கே ஓடிப்போய் மறுபடியும் பேருந்தில் டிக்கெட் விற்க ஆரம்பித்து விடலாம். தயாரிப்பாளரிடம் முடியவே முடியாது என்று கூறினேன். இதைக் கேட்ட தயாரிப்பாளருக்கு இடி விழுந்த மாறி ஆயிற்று. அவர் வசனம் எழுத சம்மதித்ததே நமக்கு கிடைத்த பாக்கியம். அவர் வசனம் எழுதினால் நம் படம் மிகப்பெரிய வெற்றி அடையும். உங்களுக்கு சிரமமாக இருந்தாலும் இதற்கு ஒப்புக்கொள்ளுங்கள் இல்லையென்றால் அவர் எழுத சம்மதித்த பிறகும் நீங்கள் வேண்டாம் என்று கூறியதை அவரிடம் நான் எப்படி சொல்வது என்று திண்டாடினார். நான் அவரை சந்திக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுங்கள், நானே அவரிடம் சொல்கிறேன் என்று கூறினேன். அவரும் வேண்டா வெறுப்பாக சரி என்று சொல்லி கலைஞர் அவர்களை சந்திக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்.

கலைஞர் அவர்களை சந்திக்க கோபாலபுரத்தில் உள்ள அவருடைய இல்லத்திற்கு சென்றேன். தமிழ் நாட்டுக்கே தெரிந்த லக்ஷனமான வீடு. அவருடைய உதவியாளர் சண்முகநாதன் அவர்கள் ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய படிக்கட்டுகள் மூலம் என்னை கலைஞர் இருக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றார். 1977 ல் மியூசிக் அகாடமி அருகில் பார்த்த அதே முகம்.., அதே புன்னகை… வாங்க என்று அவருக்கே சொந்தமான அந்த கரகரப்புக் குரலில் என்னை அழைத்து நலம் விசாரித்தார். பின்பு “கதையைக் கேட்டேன்… நன்றாக இருக்கிறது. சிறப்பாக வசனங்களை எழுதிடலாம்” என்றார். நான் அவரை சார் என்று தான் அழைப்பேன். “சார் உங்கள் வசனங்களை நான் பேச முடியாது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05-10-2023

# அறிவியலாளர்களைப் போற்றுவதிலும் முதல்வர்

அனைத்துத் துறைகளையும் இந்தியாவிலேயே முதன்மையாக மாற்றுவதன் மூலம் - இந்தியாவில் முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதல் அமைச்சராகத் திகழ்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்த வரிசையில் அறிவியலாளர்களைப் போற்றுவதிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதல்வராகத் திகழ்கிறார்!

**'ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்'** - என்ற விழாவே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தனித்தன்மையை அடையாளம் காட்டுவதாக அமைந்திருந்தது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றி - உலகையே இந்தியாவின் பக்கம் திருப்பிய - தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்பது அறிவியல் ஆய்வாளர்களை ஒரே மேடைக்கு அழைத்து வந்து பாராட்டிய காட்சி என்பது இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாதது ஆகும். ஏன், ஒன்றிய அரசே கூட இப்படி ஒரு பாராட்டுவிழாவை நடத்தியது இல்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியல் ஆய்வாளர்களை அழைத்துப் பாராட்டியதன் மூலமாக, அனைத்து மாநில அரசுகளுக்கும் முன்னுதாரணத்தைச் செய்து காட்டி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். **"இந்த மேடையில் நிற்பதே எனக்குப் பெருமையாக இருக்கிறது! தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல - தமிழனாகப் பிறந்த பெருமையை இன்றைய தினம் அதிகமாக அடைகிறேன்! இந்தியாவின் பக்கமாக உலகத்தையே பார்க்க வைத்த தமிழ்நாட்டு அறிவியல் மேதைகள் ஒன்பது பேர் இந்த மேடையில் அமர்ந்திருப்பது எனது உள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது"** என்று சொல்லிக் காட்டிய பெருமை என்பது, இதுவரை அவர்கள் அடையாத பெருமை ஆகும்.

முனைவர் கே.சிவன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, முனைவர் வி.நாராயணன், ஏ.இராஜராஜன், எம்.சங்கரன், ஜெ.ஆசீர் பாக்கியராஜ், மு.வனிதா, நிகார்ஷாஜி, முனைவர் ப.வீரமுத்துவேல் ஆகிய ஒவ்வொருவரது சிறப்பையும் சுட்டிக்காட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **"என்னைப் பொருத்த வரையில் தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் இவர்களையே தங்களது வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டு முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்"** என்று தமிழ்நாட்டு மாணவ சமுதாயத்துக்கு அவர் வைத்த வேண்டுகோள் என்பதும், இதுவரை யாரும் சொல்லிக் காட்டாத பெருமை ஆகும்.

இவை அனைத்துக்கும் சிகரம் வைப்பதைப் போல, **"இத்தகைய பெருமையை இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏற்படுத்திக் கொடுத்த - ஏற்படுத்திக் கொடுக்கப் போகும் மேதைகளாக இந்த ஒன்பது விஞ்ஞானிகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் - ஒவ்வொருவருக்கும் 25 லட்சம் ரூபாய் வழங்குகிறோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்"** என்று சொன்னபோது அரங்கமே அதிர்ந்தது. மேடையில் இருந்த அனைத்து அறிவியல் ஆளுமைகளும் எழுந்து நின்று முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தார்கள். **"உங்கள் அறிவுக்கான அளவுகோல் ஏதுமில்லை. உங்கள் உழைப்புக்கான அங்கீகாரத்தின் அடையாளமாக தமிழ்நாடு அரசு இந்தத் தொகையை வழங்குகிறது. இதனை ஏற்றுக் கொண்டு - மேலும் மேலும் இந்தியாவுக்காக உழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்"** என்று மகுடம் சூட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

'இஸ்ரோ' சிவன் சொல்லி இருக்கிறார். **"தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ள இந்த விழா மூலம் அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கின்ற பள்ளி மாணவர்கள், தாங்கள் எந்த அளவிலும் குறைவானவர்கள் அல்ல, நம்மாலும் சாதிக்க முடியும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இவர்களும் விஞ்ஞானிகளாக வருவதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது"** என்று சொல்லி இருப்பது முதலமைச்சர் அவர்களின் முழுமுதல் நோக்கத்தை எடுத்துச் சொல்வதாக அமைந்திருந்தது.

சந்திரயான் 3 - திட்ட இயக்குனர் விஞ்ஞானி வீரமுத்துவேல் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். **"தமிழக அரசு எங்களுக்கு மரியாதை செய்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. இது போன்று எங்களை ஊக்கம் அளிப்பதால் எங்களை மட்டும் அல்ல அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் சமூகத்திற்கு பெரிய அளவில் கொண்டு போக செய்யும். இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அரசாங்கத்திற்கு நன்றி. விஞ்ஞானிகள் சார்பாக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்"** என்று மகிழ்ச்சி அடைந்துள்ளார். ஆமாம்! ஒட்டுமொத்தமாக அறிவியல் உலகத்தையே பாராட்டிவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

விஞ்ஞானி வனிதா முத்தையா, **"தமிழ்நாடு அரசு எங்களுக்கு மிகப் பெரிய மரியாதையைக் கொடுத்துவிட்டது. நாங்கள் இப்படி நடக்கும் என்று நினைக்கவே இல்லை. ஒரு சின்ன நிகழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தோம். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.தமிழக முதல்வருக்கு நன்றி"** என்று மகிழ்ச்சியைத் தெரிவித்து இருக்கிறார்.

ஆதித்யா எல்1 திட்ட இயக்குனர் விஞ்ஞானி நிகர் ஷாஜி, **"எங்களை தமிழக அரசு கௌரவித்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாட்டில் பிறந்ததற்கு நாங்கள் பெருமை அடைகிறோம்"** என்று சொல்லி இருக்கிறார்.

விஞ்ஞானி நாராயணன், **"தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் வளர்ந்து உள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது பணி தமிழ்நாடும் இந்தியாவும் வளர்ச்சி அடைய அடித்தளமாக இருக்கும். நாம் அனைவரும் நம் தமிழ்நாட்டு முதல்வரை பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்"** என்று சொல்லி இருக்கிறார்.

அறிஞர்களைப் போற்றும் அரசு அறிவியல் அறிஞர்களைப் போற்றும் அரசு என்பதை அந்த மேடையில் இருந்தபடியே நாட்டுக்கு எடுத்துக் காட்டிவிட்டார் முதலமைச்சர் அவர்கள். இதேபோன்ற அறிவியல் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கும் அடித்தளம் அமைத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

**அதேபோல், அறிவியல் ஆளுமைகளால் போற்றப்படும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.**

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்.**



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155–வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சிறப்புத் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

பெற்றுத் தருவதில் மும்முரம் காட்ட வேண்டும்.

பட்டியலின - பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்கொடுமை செயல்கள் குறித்து அம்மக்கள் மாவட்ட அலுவலர்களுக்கு அச்சமின்றி தகவல் தெரிவிக்க பிரத்யேக 'வாட்ஸ் அப்' மற்றும் தொலைபேசி எண்ணை மாவட்ட ஆட்சியர்கள் அறிவித்து அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சமீப காலத்தில், தூத்துக்குடி மாவட்டம், மொறப்பநாடு கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அவர்கள் மற்றும் திருச்சி மாவட்டம், நவல்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதன் ஆகியோரின் கொலை வழக்குகளில் காவல்துறை விரைவாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்தது பாராட்டத்தக்கது.

தற்போதைய காலகட்டத்தில், உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புவதில் சமூகஊடகங்களின் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் சமூக ஊடகங்களைத் தொடர்ந்து கண்காணித்து, பொய்ச் செய்திகளை பரப்புவோர் மீதும், சமூக ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிப்போர் மீதும் கடுமையான நடவடிக்கையை எடுப்பதோடு, அதற்குரிய உண்மை நிலையை சமூக ஊடகங்களில் தெளிவு படுத்த வேண்டும்.

முன்னுரையாக சில கருத்துகளை நான் கூறினேன். என் மனதின் எண்ணங்களை உங்களோடு நான் பகிர்ந்து கொண்டேன்.

நான் குறிப்பிட்ட ஆலோசனைகள் பற்றியும் இதனைத் தாண்டியும் பல்வேறு நடப்புகள் குறித்தும், அரசின் திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்று சேரவும் உங்களது ஆக்கப்பூர்வமான கருத்துகளையும் செயல்திட்டங்களையும் இங்கு வழங்குங்கள்.

கருத்துகளைச் சொல்ல இருப்பவர்கள் சுருக்கமாகவும் அதே நேரத்தில், தெளிவாகவும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் கட்டமைப்பிற்கு வேண்டிய வசதிகள் குறித்து, இக்கூட்டம் முடிந்த பிறகு, துறைத் தலைவர்களிடம் நீங்கள் முறையிட்டு தீர்வு காணலாம். எனவே, மாவட்ட நிர்வாகம், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்து மட்டும் இங்கே கருத்துகளைப் பதிவு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் மாநாட்டின் இறுதியில் நான் விளக்கங்களை அளிக்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசுத் துறைச் செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி - தொப்பம்பட்டி

# ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், அக்.5-

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளை அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார். மஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சியில் 84 பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், இப்பகுதி மக்களுக்கு தேவையான சாக்கடை வசதி, சிமெண்ட் சாலைகள், தடுப்பணை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். 306 ஊராட்சிகளிலும் மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆட்சி பொறுப்பேற்ற முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்றத் தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக்கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீடிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 18.50 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

பெண்கள் படிக்கின்ற 2 கல்லூரிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அடுத்தாண்டு ஒட்டன்சத்திரத்தில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். உயர்கல்வித் துறையின் மூலமாக ஆண்கள், பெண்கள் படிக்கின்ற அரசு கல்லூரி கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. விருப்பாட்சியில் தொழிற் பயிற்சி கல்லூரி ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், ஒட்டன்சத்திரத்தில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் போட்டி தேர்வுக்கு தயாராகும் பயிற்சி மையம் குளிர்சாதன வசதியோடு, பெரிய நூலகத்துடன் அமைக்கப்படும்.

தொப்பம்பட்டி மற்றும் கோதையுறம்பு ஆகிய பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன கிடங்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரத்தில் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைப்பார்கள். பெண்களுக்கு வழங்கப் படும் கடன் தொகை ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பெண்கள் முன்னேற்றத்திற் காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோல் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். எனவே, பொதுமக்கள் வருகின்ற காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும். ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மஞ்சநாயக்கன் பட்டி, தேவத்தூர், சிக்கமநாயக்கன்பட்டி, கள்ளிமந்தையம், பொருளூர், வேலம்பட்டி, மேட்டுப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.21.97 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் முருகாத்தாள், ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் பழனிச்சாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தன ராணி மோகனபிரபு, ஒட்டன்சத்திரம் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தலைவர் ராஜாமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் தசீரா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### ஆசிய விளையாட்டுப் போட்டிகளில்

# பதக்கம் வென்றவர்களுக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 5-

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023இல் பதக்கம் வென்றவர்களை பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023இல் துப்பாக்கி சுடுதல் (ஆடவர் ட்ராப்) பிரிவில் தங்கப் பதக்கம் வென்று இந்தியாவைப் பெருமைப்படுத்தியுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப்ரித்விராஜ் தொண்டைமான் அவர்களுக்கு என் பாராட்டுகள்.**

**மேலும் ஆடவர் இரட்டையர் டென்னிஸ் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றதற்காகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மற்றுமொரு திறமையாளரான ராம்குமார் ராமநாதன் அவர்களுக்கும் என் வாழ்த்துகள்.**

**ஸ்குவாஷ் விளையாட்டில் மகளிர் பிரிவில் வெண்கலம் பதக்கம் வென்றுள்ள நமது தமிழ்நாட்டு வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா மற்றும் தீபிகா பல்லிகல் ஆகியோருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தனி ஆளாகக் கட்சியைக் கட்டுக்கோப்பாக வழி நடத்தியவர் கலைஞர்!

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சிறப்புக் கட்டுரை முதல் பக்கத் தொடர்ச்சி



எளிமையான தமிழை பேசவே நான் சிரமப்படுகிறேன். அப்படி இருக்கும் போது உங்கள் வசனங்களை எப்படி நான் பேசுவது? என்னால் முடியாது. தவறாக நினைக்க வேண்டாம்" என்று கூறினேன். அதற்கு அவர் சிரித்து "எனக்கு யாருக்கு எப்படி எழுதவேண்டும் என்று நன்றாகவே தெரியும். சிவாஜிக்கு எழுதுவது போல எம்.ஜி.ஆருக்கு எழுத மாட்டேன்... அதே போல எம்.ஜி.ஆருக்கு எழுதுவதைப்போல சிவாஜிக்கு எழுதமாட்டேன். உங்கள் படங்களை நான் பார்த்துள்ளேன். உங்கள் ஸ்டைலில் நான் எழுதுகிறேன்" என்று சர்வ சாதாரணமாக கூறினார். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அந்த யோசனை அந்த நொடியில் எனக்கு தோன்றியதற்கு நீ கெட்டிக்காரன்டா என்று நானே மகிழ்ந்து "சார் படப்பிடிப்பில் நாங்கள் சில வசனங்களை மாத்துவோம் சில வசனங்களை நீக்குவோம். அப்படி இருக்கும்போது உங்கள் வசனங்களை மாத்தவும் முடியாது நீக்கவும் முடியாது. அது சரியானதாகவும் இருக்காது" என்று கூறினேன்.

அதற்கு அவர் "மாற்றுங்கள்.. ஒன்றும் தவறில்லை, அது என்ன திருக்குறளா?" என்று கூறினார். அவர் அப்படி சொல்லுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய கெட்டிக்காரத்தனமெல்லாம் நொடியில் சாம்பல் ஆகி விட்டது. எனக்கு ஒன்றும் புரியாமல் அமைதியாக இருந்தேன். இதை கவனித்த கலைஞர் சிரித்துக்கொண்டே "முன்னால் யார் வசனங்களை எழுதினாரோ அவரே எழுதட்டும்... நான் தவறாக நினைத்துக்கொள்ள மாட்டேன்... நீங்கள் கவலைப்பட வேண்டாம்..." என்று கூறி தன் உதவியாளரிடம் தயாரிப்பாளரை அழைக்கும் படி கூறினார்.

தயாரிப்பாளரிடம் "என்னுடைய வசனங்களை பேசுவதற்கு தனக்கு கஷ்டமாக இருக்கும் என்று ரஜினி கூறுகிறார். நான் அவருடைய பாணியிலேயே எழுதித் தருகிறேன் என்று சொன்னேன். அவரும் சம்மதித்தார். ஆனால் இந்த மாதம் 10ஆம் தேதி படப்பிடிப்பு என்று ரஜினி கூறுகிறாரே... நான் அடுத்த மாதம் என்று தானே நினைத்துக் கொண்டிருந்தேன்... காலம் மிகவும் கம்மியாக இருக்கின்றது. எனக்கு ஏற்கனவே முன் நிர்ணயிக்கப்பட்ட வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆகையால் இந்தப் படத்திற்கு என்னால் வசனங்கள் எழுத முடியாது. அடுத்த படத்தில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி தயாரிப்பாளரை அனுப்பி வைத்தார். பிறகு என்னைப் பார்த்து "என்ன ரஜினி இப்போ உங்களுக்கு திருப்தியா?" என்று கேட்டார்.

தயாரிப்பாளரின் மனதையும்துன்புறுத்தாமல், என்னையும் திருப்திபடுத்திய அவருடைய செய்கையால் எனக்கு அவர் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் பல மடங்கு உயர்ந்தது. ஆனாலும் அவருடைய வசனங்களை பேசி நடித்திருக்கலாமோ? தவறு செய்து விட்டோமோ? என்ற ஒரு குற்ற உணர்ச்சி இன்றும் எனக்குள் இருந்து கொண்டே இருக்கின்றது.

பல நேரங்களில் நான் அவருடன் நெருங்கிப் பழகி இருக்கிறேன். அவர் எந்த ஒரு விஷயத்திற்கும் நான் அவரை கவனித்துப் பார்த்ததில் எந்த ஒரு முடிவையும் எடுத்தோமா கவிழ்த்தோமா என்று எடுக்க மாட்டார். அதற்கு சம்மந்தப்பட்டவர்களின் பல பேருடன் விசாரித்து, பேசி, விவாதித்து தான் எந்த ஒரு முடிவையும் எடுப்பார். அப்படி இருக்கும் போது எம்.ஜி.ஆர் அவர்களை கட்சியில் இருந்து நீக்கும் முக்கியமான முடிவை நிச்சயம் கலைஞர் அவர்கள் பல பேரின் ஆலோசனைகளை கேட்டுதான் எடுத்திருப்பார்.

எனக்கு தெரிந்த ஒருவர். அவர் பெயர் கூற இயலாது. அவர் எனக்கு ஒரு ஆடியோ கேசட்டை கொடுத்து "இதை யாரிடமும் கொடுக்க வேண்டாம். நீங்கள் மட்டும் கேட்டுபிறகு என்னிடமே திருப்பிக்கொடுத்து விடுங்கள்" என்று கூறினார். அது 1972 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டு நீக்கப்பட்ட பிறகு அவர்க்கும் திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களுக்கும் நடந்த தொலைப்பேசி உரையாடல் ஆகும். அதில் திரு. எஸ்.எஸ்.ஆர். அவர்கள் "அண்ணே... ஏதோ கெட்ட நேரம் அவசர அவசரமாக என்னென்னமோ நடந்து விட்டது. வருங்காலத்தில் கழகத்திற்கு இதனால் பெரிய இழப்பு ஏற்படும். வேறு யாரும் இல்லாமல் நீங்கள் இருவர் மட்டும் ஒரு பொது இடத்தில் சந்தித்து மனம் விட்டுப்பேசினால் எல்லாம் சரி ஆகிடும். கலைஞரிடம் நான் பேசுகிறேன். எனக்காக இதை செய்யுங்கள்" என்று கூறுவார். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் "இல்லைதம்பி.. என்னுடைய விசுவாசிகள் எனக்கு ஆதரவாக போராட்டங்கள் செய்து என்னுடைய அபிமானிகள் என்று அடையாளம் காட்டிக் கொண்டு விட்டார்கள். நான் திரும்பி கட்சியில் சேர்ந்தால் என்னுடைய அபிமானிகளை கட்சியில் உள்ளவர்கள் முந்தைய மாதிரிப் பார்க்க மாட்டார்கள். அவர்களைத் தனிமைப்படுத்துவார்கள் அவர்கள் எல்லாம் உதிரிப்பூக்கள் ஆகிவிடுவார்கள். அவர்களுக்காகவே நான் தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டும். எனக்கு வேறு வழியில்லை. தப்பாக நினைத்துக் கொள்ளாதே" என்று அந்த உரையாடல் முடிந்திருக்கும்.



அதன் பின் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அ.தி.மு.க. என்ற கட்சியை உருவாக்கினார். அதன் பின் யார் யார் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்று சொன்னார்களோ.. அதில் பல பேர் ஒவ்வொருவராக கட்சியிலிருந்து விலகி எம்.ஜி.ஆர். பக்கம் போனார்கள். அதனால் கலைஞரின் இதயம் எவ்வளவு வேதனையில் துடித்திருக்கும்?

எதையும் தாங்கும் இதயம் என்று அண்ணா இவரை நினைத்து தான் சொன்னாரோ? எவ்வளவு வேதனைகள், சங்கடங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள் என அத்தனையும் தாண்டி தொண்டர்களுக்கு அவர் எழுதிய ஆயிரக்கணக்கான கடிதங்கள், கட்டுரைகள், சினிமாவில் எழுதிய வசனங்கள், அவர் செய்த சுற்றுப்பயணங்கள், மேடைப்பேச்சுகள், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லை என்றாலும் கட்டுக் கோப்பாக, ஒரு தனி ஆளாக கட்சியை வழி நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தார் என்றால் அது ஒரு மாபெரும் புரட்சி.

அவரைப்பற்றி எழுதினால் எழுதிக் கொண்டே போகலாம். அவருடைய இந்த நூற்றாண்டில் அவரை நினைத்து, அவருடன் நான் கழித்த எத்தனையோ தருணங்களை ஞாபகப்படுத்தி, அவர் வாழ்ந்த அதே காலத்தில் நானும் வாழ்கிறேன், அவருடைய இதயத்தில் எனக்கென்று ஒரு தனி இடம் இருந்தது. அதனால்தான் எந்த ஒரு விழாவிலும் என்னை அவர் அருகில் அமர வைத்து மகிழ்வார் என்பதை நினைக்கும் பொழுது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கின்றது.

**வாழ்க கலைஞரின் புகழ்!!!**

**வணக்கம்!!!**

### ‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்’ என அண்ணா கலைஞரை நினைத்துத்தான் சொன்னாரோ?

எதையும் தாங்கும் இதயம் என்று அண்ணா இவரை நினைத்து தான் சொன்னாரோ? எவ்வளவு வேதனைகள், சங்கடங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள் என அத்தனையும் தாண்டி தொண்டர்களுக்கு அவர் எழுதிய ஆயிரக்கணக்கான கடிதங்கள், கட்டுரைகள், சினிமாவில் எழுதிய வசனங்கள், அவர் செய்த சுற்றுப் பயணங்கள், மேடைப்பேச்சுகள், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லை என்றாலும் கட்டுக் கோப்பாக, ஒரு தனி ஆளாக கட்சியை வழி நடத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்தார் என்றால் அது ஒரு மாபெரும் புரட்சி.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில், தமிழ்நாடு வனத்துறை வரலாற்றில் முதன்முறையாக சிறப்பாக பணியாற்றிய மாவட்ட வன அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கும் வகையில், 2022–23ஆம் ஆண்டுக்கான வளங்குன்றா வனமேலாண்மை நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் எஸ். ஆனந்த், மனித வன உயிரின மோதல்கள் மேலாண்மை நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை இராமநாதபுரம் வன உயிரின காட்டாளர் பாகன் ஜெக்தீஸ் சுதாகர், வன உரிமைச்சட்ட நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை கன்னியாகுமரி வன உயிரின காப்பாளர் எம்.இளையராஜா ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு ஆகியோர் உள்ளனர்.

### செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால்

## லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம்!

### உருகுவே -சர்வதேச கருத்தரங்கில் பி.வில்சன் எம்.பி. உரை!

சென்னை, அக் 5-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பி.வில்சன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

உருகுவேயில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் கலந்து கொண்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து விரிவாக உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி மற்றும் அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறி வருகிறது.

செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் கிட்டத்தட்ட இன்று எல்லா துறைகளிலும் காணப்படுகின்றன செயற்கை நுண்ணறிவு



தொழில்நுட்பத்தால் புதிய வாய்ப்புகள் உருவாகும் அதே வேளையில், அதன் பயன்படுத்தும்போது ஏற்படும் அபாயங்களைப்புரிந்து கொள்வதற்கும், அவற்றை நிர்வகிப்பதும் பெரும் சவாலாக உள்ளது.

தொழில்நுட்பத்தில் முன்னேறுவதற்கான போட்டியில் நாம் ஈடுபடுவதால், பாதுகாப்புகளில் நம்முடைய சுவனம் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அணு ஆயுத பயன்பாட்டைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒப்பந்தங்களைப் போலவே, செயற்கை நுண்ணறிவுக்கும் ஒப்பந்தங்கள் வேண்டும் என கோரிக்கை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்தே எழுந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் விளைவுகள் நேர்மறையாகவும், அவற்றின் அபாயங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருந்தால் மட்டுமே. அவற்றின் உருவாக்கத்திற்கு நாடாளுமன்றங்கள் ஒப்புதல் தர வேண்டும். செயற்கை நுண்ணறிவு நமக்கு முன்வைக்கும் ஒரு முக்கியமான சவால், இது வேலையின்மைக்கு வழி வகுக்கும். மேலும் லட்சக்கணக்கான ஊழியர்கள் வேலையை இழக்க நேரிடும். எனவே, நாம் கட்டமைக்கும் ஒழுங்குமுறைகள், வேலை வாய்ப்பை பாதுகாப்பதை உறுதிசெய்ய வேண்டும். தேவைப்படும் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் இயற்றும் முன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வரைவுச் சட்டத்தை உருவாக்கி, பொது மக்கள், துறை வல்லுநர்கள், தொழில் துறையினர், மனித உரிமை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், குழந்தைகள் உரிமை அமைப்புகள் என பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை செய்ய வேண்டும்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தெரிவித்தார்.

## புதுக்கோட்டையை மாநகராட்சியாக அறிவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்!

### அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

புதுக்கோட்டை, அக்.5-

புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், ரூ .75.06 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.என்.நேரு, புதுக்கோட்டையில் காவிரி கூட்டுக் குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டுள்ளதால் முறையாக குடிநீர் வழங்க முடியவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட 10 எம் எல் டி தண்ணீர் மட்டுமே கொடுக்கப்பட்டு வருகிறது. குழாய்கள் சீரமைக்கப்பட்டால் 16 எம்எல்டி தண்ணீர் வழங்கப்படும். இதற்காகத்தான் தற்போது ரூ.75.06 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ரூ2,195 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. பாதாள சாக்கடை திட்டத்தில் சென்னை போன்ற முக்கிய நகரங்களில் இயந்திரங்கள் மூலம் கழிவுகள் அகற்றும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில தனிப்பட்ட நபர்கள் நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்காமல் கழிவுகளை அகற்ற முற்படும்போது எதிர்பாராதவிதமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. பாதாள சாக்கடைகளை அகற்ற தேவையான இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உயிரிழப்புகளை தடுக்க அரசு முழு முயற்சி



மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு சிலர் செய்யும் தவறால் அரசுக்கு தேவை இல்லாமல் கெட்ட பெயர் ஏற்படுகிறது. தூய்மை பணியாளர்களாக பணியாற்றி வரும் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நடக்கும் தவறுகளை திருத்திக் கொண்டுதான் உள்ளோம் என கூறினார். புதுக்கோட்டையை மாநகராட்சியாக அறிவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். நிதி வருவாயை கருத்தில் கொண்டு மன்னர் நகரம் என்பதாலும் விரைவில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 02.10.2023 அன்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முனசந்தை ஊராட்சி மன்றத் தலைவர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களை சிறப்பிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், அவர்களுக்கும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர். வி. சஜீவனா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என்.ஸ்ரீதர், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு ஆகியோர் உள்ளனர்.

### கடலூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கி

# உயிரிழந்த மாணவியின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.5-

கடலூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த மாணவியின் குடும்பத்திற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்துள்ளதுடன், நிதியுதவியையும் அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கடலூர் மாவட்டம், தொண்டமாநத்தம் மதுரா, எஸ்.என்.நகர் என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி. ஜெயஸ்ரீ, த/பெ.செல்வக்குமார் (வயது 14) என்ற 9ம் வகுப்பு படித்து வந்த மாணவி, (1.10.2023) அன்று அப்பகுதியிலுள்ள நாகம்மாப்பேட்டை குளத்தில் குளித்த போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

செல்வி. ஜெயஸ்ரீயை இழந்து வாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



முன்னாள் சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் மாநில தேர்தல் பணிக் குழு செயலாளருமான வீரபாண்டி ஆ.ராஜா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் வீரபாண்டி பூலாவரியில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.காந்தி ஆகியோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., டி.எம்.செல்வகணபதி, பொதுக் குழு உறுப்பினர் மலர்விழி ராஜா, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், டாக்டர் தருண், வீரபாண்டி ஆ.பிரபு மற்றும் குடும்பத்தினர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் ஆ.ராஜாவின் நினைவிடத்தில் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### பீகார் மாநில சாதிவாரிக் கணக்கெடுப்பு, பிற்படுத்தப்பட்ட மக்களை விழிப்படையச் செய்துள்ளது!

# ஒன்றிய அரசு சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்தி சமூகநீதியை நிலைநாட்ட வேண்டும்!

### விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, அக்.5-

விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித்தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



பீகார் மாநிலத்தில் பல்வேறு தடைகள் மற்றும் முட்டுக்கட்டைகளைக் கடந்து சாதிவாரிக் கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு தற்போது அதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் ஒவ்வொரு சமூகத்தின் எண்ணிக்கை மற்றும் அரசில் அவருடைய பங்கு போன்றவை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இது தேசிய அளவில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்த மகத்தானப் பணியினை மேற்கொண்ட பீகார் அரசுக்கும், அம்மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த கணக்கெடுப்பில் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 63 சதவிகிதம் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையும் சேர்த்தால் ஏறத்தாழ 83 விழுக்காடு அடித்தட்டு மக்களாக உள்ளனர் என்பது தெளிவாகிறது. இவர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு இருக்கிற சமூக நீதி, பொருளாதார முன்னேற்றத்திற்கு சமூக நிலையில் சமன்பாட்டிற்கு அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், அதன் மூலம் இந்த மக்கள் அடைந்திருக்கிற முன்னேற்றம் போன்றவற்றை துல்லியமாக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இந்தியாவின் மக்கள் தொகை எப்படி இருக்கும் என்பதற்கான அளவுகோலாக பீகார் மாநில சாதி வாரி கணக்கெடுப்பு விவரம் அமைந்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று 83 விழுக்காடாக உள்ள இந்த மக்களுக்கு மத்திய அரசிலுள்ள மிக முக்கிய அரசு செயலாளர்கள் பதவியில் 90 இல் மூன்று மட்டுமே இந்த சமூகத்திற்கு கிடைத்திருக்கிறது என்றும், ஒட்டுமொத்தமாக இந்த சமூகத்திற்கு நிதி நிலையில் 5 விழுக்காடு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற செய்தி பெரும்பாலான மக்களை சிந்திக்க வைத்திருக்கிறது. இதன் மூலம் நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு அந்த சமூக நீதியை அடைவதற்கான ஒரு சிந்தனைக் களமும் அதற்கான தொடர் முயற்சியும் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

2009-14 காலகட்ட காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின் போது எடுக்கப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பை மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி இன்று வரை வெளியிடவில்லை. இது பெருவாரியாக உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மோடி அரசு செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். அது மட்டுமின்றி பீகார் மாநில சாதிவாரி கணக்கெடுப்பு வெளியான பிறகு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் சாதி வாரியாக மக்களை கூறு போடுகிறார்கள் என்று கூறுவது குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றி குழியையும் பறித்த கதையாக உள்ளது. மோடி அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் மேட்டுக்குடியின் குரலாக அவர்களின் ஏவலாளியாக தான் இருந்து செயல்பட்டு வருகிறார்.

பாரதிய ஜனதா கட்சியும் அதன் பின்னால் இருந்து செயல்படும் அமைப்புகளும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஒரு இயக்கமாகும். நீண்ட இழுபறிக்கு பிறகு முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களால் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசின் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை இயற்றினார். அப்போது அதை கடுமையாக எதிர்த்தவர்கள் யார்? இட ஒதுக்கீடு வழங்கிய வி.பி.சிங் தலைமையிலான அரசை கவிழ்த்தது யார்? அது பாரதிய ஜனதா கட்சி என்பது நாடறிந்த உண்மையாகும். சனாதனம், இந்து தர்மம், இந்து மதம் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்கிற இவர்கள் இந்து மதத்தை சேர்ந்த பெருவாரியான மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கினால் அதை எதிர்ப்பது, அதை கொண்டு வந்த ஆட்சியை அகற்றுவது என்பது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இந்து மதத்தில் உள்ள பெருவாரியானவர்கள் உணர்ந்து கொள்ளாத காரணத்தினால் தான் அவர்களால் மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சியில் அமர முடிகிறது. இவற்றையெல்லாம் பெருவாரியான இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது சமூக நீதியை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு ஆகும். திராவிட இயக்கம் இருந்த காரணத்தினால், தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தினால் அனைத்து மக்களுக்குமான சமூக நீதி வழங்கக் கூடிய வகையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. இந்திய அரசியல் சட்டம் முதன் முதலில் திருத்தப்பட்டது இந்த இட ஒதுக்கீட்டுக்காக தான். அதனை செய்த பெருமையை தமிழ் நாட்டுக்கு உண்டு.

எனவே தமிழ்நாட்டைப் போன்று பிற மாநிலங்களிலும் அனைத்து மக்களுக்குமான சமூக நீதி வழங்கக்கூடிய இட ஒதுக்கீட்டை மக்கள் தொகைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்திடவும் அதே போன்று ஒன்றிய அளவிலும், ஒன்றிய அரசின் இடஒதுக்கீடு அனைத்து நிலைகளிலும் சமூக நீதிக்காக நடைமுறைப்படுத்திடவும் சாதிவாரி கணக்கெடுப்பு மிக முக்கியமான ஒன்றாகும். எனவே ஒன்றிய மோடி அரசு ஏற்கனவே எடுக்கப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பை வெளியிட்டு அதன் அடிப்படையில் இடஒதுக்கீட்டு நடைமுறைப்படுத்த முன் வர வேண்டும். அல்லது புதிதாக விரைந்து சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தி சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய அரசின் புதிய மருத்துவக் கல்லூரி கொள்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# முதல்வரின் மருத்துவ திட்டங்களுக்கு பாராட்டு!

### தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மருத்துவ அணி தீர்மானம்!

கரூர், அக். 5 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மருத்துவ திட்டங்களுக்கு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது. மசோதாவை கிடப்பில் போட்டுள்ள எதேச்சாதிகாரத்தை கண்டித்து கவர்னர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மருத்துவ சேவை அணி மாநில செயற்குழு கூட்டம் கரூர் பசுபதி பாளையத்தில் நடைபெற்றது. இதன் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கரூர் மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது வரவேற்று பேசினார். மாநில பொதுச்செயலாளர் ஹாஜா கனி, அப்துல் சமது (எம்.எல்.ஏ), சபியுல்லாஹ் கான், கோவை உமர், சம்சுதீன், முஸ்தபா, பாரூக் அப்துல்லா, ஜிஃப்ரி காசிம், நூர்தீன், அப்துல் ரஹீம், மருத்துவ சேவை அணி நிர்வாகிகள் கலீல் ரகுமான், அப்துல் ரபி, கதிர், பதேகான், பௌஜுல் ஹசன், ஜாகிர் உசேன், ரசூல் மைதீன், ஷேக் அமானுல்லா, பத்ருதீன், சையது அபுதாஹிர், அன்சாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும், தாய் சேய் பரிசு பெட்டகத் திட்டம் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேர திட்டம், 108 அவசர ஊர்தி சேவை, 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம், 102 இலவச தாய் சேய் நல ஊர்தி திட்டம், 155377 இலவச அமரர் ஊர்தி சேவை திட்டம் போன்ற புதிய மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களை வரவேற்பது, இதற்காக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது.

மேற்கண்ட திட்டங்களின் பயன்கள் தனியார் மருத்துவமனைகளிலும் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியத

அண்ணா பிறந்தநாளில் சிறைகளில் சுமார் 20 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருவோரை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். இதனை ஏற்று தமிழ்நாடு அரசு 49 நீண்ட கால சிறைவாசிகளை விடுதலை செய்ய ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. ஆனால் ஏறத்தாழ ஒரு மாதம் ஆகியும் ஆளுநர் இருந்த கோப்புக்கு ஒப்புதல் தராமல் காலம் கடத்தி வருகிறார். ஆளுநரின் இந்த எதேச்சதிகார நடவடிக்கையைக் கண்டித்து சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையை வரும் அக்டோபர் 26 ஆம் தேதி முற்றுகையிட உள்ளோம்.

எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநரை பயன்படுத்தி அம்மாநில ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய அரசை வன்மையாக கண்டிக்கிறோம். பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது வரவேற்கத்தக்கது. என்றாலும் எத்தனை நாட்களுக்கு இது நீடிக்கும் என்பது கேள்விக்குறியே. மேலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான குடியுரிமை திருத்த சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களை அ.தி.மு.க.வின் வாக்குகளை பெற்றுத்தான் ஒன்றிய அரசு சட்டமாக நிறைவேற்றி உள்ளது. அ.தி.மு.க. கொள்கை என்ன என்பது புரியாத புதிராக இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணியில் இருந்து ஒவ்வொரு கட்சியாக வெளியேறி வருவது தேசிய ஜனநாயக கூட்டணி வலுவிழந்து வருகிறது என்பதை காட்டுகிறது என்றார்.

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் வெள்ளத்துரை அவர்கள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து.ப. அழகமுத்து
**அக்டோபர் 5 (1987)**



பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மூர்த்தி
**அக்டோபர் 5 (2001)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப்!

# அறிவியல் ஆர்வத்தையும் ஆளுமைத் திறனையும் வளர்த்துக்கொள்வீர்!

## தமிழ்நாடு விண்வெளி விஞ்ஞானிகள் பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.5-

**இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிவியல் மேதைகளான ஒன்பது விஞ்ஞானிகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின் கீழ், அரசின் கல்வி உதவித்தொகை பெற்று இளநிலை பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பை தொடர்கின்ற 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித்தொகைக்காக, பத்து கோடி ரூபாயில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.10.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழாவில் உரையாற்றினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

இந்த மேடையில் நிற்பதையே நான் பெருமையாக கருதுகிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டும் இல்லை, தமிழனாக பிறந்த பெருமையை இன்றைக்கு நான் அதிகமாக அடைந்து கொண்டிருக்கிறேன்.

இந்தியாவின் பக்கம் உலகத்தையே பார்க்க வைத்த தமிழ்நாட்டு அறிவியல் மேதைகள் ஒன்பது பேர் இந்த மேடையில், அமர்ந்திருப்பது என்னுடைய உள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

கல்வி சிறந்த தமிழ்நாடுபுகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடுநெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்-மணி ஆரம் படைத்த தமிழ்நாடு என்று பாடிய மகாகவி பாரதியார் இப்போது இருந்திருந்தால், இஸ்ரோ சிவனும், மயில்சாமி அண்ணாதுரையும் பிறந்த தமிழ்நாடு, நாராயணனும், சங்கரனும், ராஜராஜனும், ஆசீர் பாக்கியராஜும், வனிதாவும், நிகார் ஷாஜியும் பிறந்த தமிழ்நாடு, வீரமுத்துவேல் பிறந்த தமிழ்நாடு என்று பாராட்டிப் போற்றியிருப்பார்.

அந்தளவுக்கு உலகத்தையே இந்தியாவின் பெருமையை உணர்த்துகின்ற தமிழர்களாக நீங்கள் இங்கே உயர்ந்து நிற்கிறீர்கள். அந்த உயரத்தில் இருக்கின்ற உங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் அழைத்துப் பாராட்ட வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

எங்களுடைய எண்ணத்தை ஏற்றுக் கொண்டு வருகை தந்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகிற்கே முக்கியமான நாள்!

ஆகஸ்ட் 23ஆம் நாள் இந்தியாவுக்கு மட்டும் இல்லை, உலகத்துக்கே முக்கியமான நாள்! நிலாவில் இந்தியா இறங்கிய நாள். சந்திரயான் விண்கலத்துடன் லேண்டரானது வெற்றிகரமாக நிலவில் இறங்கிய நாள்!

1959ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும், 1964ஆம் ஆண்டு அமெரிக்காவும், 2013ஆம் ஆண்டு சீனாவும்தான் இந்தச் சாதனையை செய்திருக்கிறார்கள்.

2008ஆம் ஆண்டு நிலாவை நோக்கிய பயணத்தை இந்தியா தொடங்கியது. 2023ஆம் ஆண்டில் அந்த சாதனையின் எல்லையை அடைந்திருக்கிறது. அதாவது நிலாவை தொட்ட நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது!

மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பையும் இந்தியா அடைந்திருக்கிறது. இதுவரை அறியப்படாத நிலவின் தென்துருவப்பகுதியை சந்திரயான்3 தரையிறங்கி ஆராயத் தொடங்கியிருக்கிறது. அந்த சந்திரயான்3 திட்டத்தின் இயக்குநராக இந்தியாவின் தென் பகுதியைச் சேர்ந்த, அதிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரமுத்துவேல் செயல்படுத்திக் காட்டியது நமக்கெல்லாம் பெருமையிலும் பெருமை!

### தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்தும் பாராட்டும்!

சந்திரயான்3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியதற்கு இணையாக விண்வெளி ஆராய்ச்சில் கொடி கட்டிப் பறக்கும் தமிழர்கள் என்ற செய்தி அதிகமாக பரவியது. இப்படிப்பட்ட பெருமையை தமிழ்நாட்டுக்குத் தேடித்தந்த அறிவியல் மேதைகளான உங்கள் எல்லோரையும் தமிழ்நாடு முதலமைச்சராக கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், போற்றுகிறேன். உங்கள் எல்லோரையும் வணங்குகிறேன்.

இது பேரறிஞர் அண்ணா பெயரால், தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்த அரங்கம்! இந்த இடத்திற்கு அழைத்து உங்களுக்குப் பாராட்டு விழா நடத்துவது மிகமிக பொருத்தமான ஒன்று!

'இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன் உருவாகவில்லை? இந்த நாட்டில் ஏன் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை? என்று ஏக்கத்துடன் கேட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.10.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற "ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்" சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழாவில், இந்திய விண்வெளி துறையில் சாதனை படைத்த விஞ்ஞானிகள் - இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் தலைவர்கள் முனைவர் கே. சிவன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, திருவனந்தபுரம் - திரவ உந்து அமைப்பு மையத்தின் இயக்குநர் முனைவர் வி. நாராயணன், ஸ்ரீஹரிகோட்டா -சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஏ. இராஜராஜன், பெங்களூரு யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தின் இயக்குநர் எம். சங்கரன், மகேந்திரகிரி உந்துவிசை வளாக இயக்குநர் ஜெ. ஆசிர் பாக்கியராஜ், சந்திராயன்-2 திட்ட இயக்குநர் திருமதி மு. வனிதா, ஆதித்யா L1 திட்ட இயக்குநர் திருமதி நிகார் ஷாஜி, சந்திரயான் 3 திட்ட இயக்குநர் ப. வீரமுத்துவேல் ஆகியோரை பாராட்டி, அவர்களுக்கு சால்வை அணிவித்து, பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தனை அறிவியல் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்கள். இந்த மேடையை பாருங்க அண்ணா' என்று சொல்வதற்குதான் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக் கூடிய இந்த அரங்கில் இந்த விழாவை நடத்துவது மிக மிக பொருத்தமானது என்று சொன்னேன்.

நம்ம தமிழ் அறிவு என்பதே அறிவியல் அறிவுதான். எதையும் பகுத்துப் பார்க்கும் பகுத்தறிவுதான் தமிழறிவு!

### திருக்குறளில் அறிவியல் சிந்தனை!

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு', இந்தக் குறளுக்கு இணையான அறிவியல் சிந்தனை இருக்க முடியாது. இப்படிப்பட்ட அறிவியல் அறிவைத்தான் நம்முடைய தமிழ் இலக்கியங்கள் நமக்கு கற்பித்திருக்கிறது.

நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்..' என்று அன்றைக்கு சொன்னது தொல்காப்பியம்.

நிலம் தீ - காற்று நீர் - வானம் - ஆகிய ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்று சொல்லியிருக்கிறது. நில அமைப்பை ஐந்தாக பிரித்து, பொருளை மூன்றாக பிரித்து வாழத் தொடங்கிய இனம் நம்முடைய தமிழினம். இதில் தமிழர்களுடைய வானியல் அறிவு தனித்தன்மை வாய்ந்தது. புறநானூற்றின் முதல் பாடலில் 'நிலம் ஏந்திய விசும்பும்' என்று வானைப் பற்றி பாடப்பட்டிருக்கிறது.

> 'இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன் உருவாகவில்லை? இந்த நாட்டில் ஏன் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை? என்று ஏக்கத்துடன் கேட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.
>
> நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தனை அறிவியல் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்கள். இந்த மேடையை பாருங்க அண்ணா' என்று சொல்வதற்குதான் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரங்கில் இந்த விழாவை நடத்துவது மிகமிக பொருத்தமானது என்று சொன்னேன்.

முடிவாக 400ஆவது பாடலும், 'மாவிசும்பின் வெண் திங்கள்' என்று வானத்தைப் பாடித்தான் முடியும்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என்று சூரியனையும் நிலவையும் போற்றிப் பாடித்தான் சிலப்பதிகாரம் தீட்டினார் இளங்கோவடிகள்!

### தமிழ்நாட்டில் உருவான அறிவியல் மேதைகள்!

அணி நிலாதுணி நிலாமணி நிலாபணி நிலா என்று பாடியது சீவகசிந்தாமணி. இப்படிசூரியனையும்-நிலவை யும் வானத்தையும் பாடாமல் தமிழ் இலக்கியங்கள் இருந்தது இல்லை. இதையெல்லாம் நான் சொல்லக் காரணம்... விருப்பு வெறுப்பற்ற அறிவியல் அறிவுதான் தமிழ்நாட்டின் அறிவாக இருந்தது. அதுதான் இந்த அறிவியல் மேதைகள் உருவாக்கி இருக்கிறது.

இன்னும் சொன்னால், இந்த ஒன்பது பேரில் ஆறு பேர் அரசுப் பள்ளியில் படித்தவர்கள். அதுதான் மிகமிகப் பெருமைக்குரியது. மிகமிகச் சாதாரண ஊர்களில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து படித்து முன்னேறியவர்கள். முதல் தலைமுறைப் பட்டதாரிகளாக இருந்து விஞ்ஞானிகளாக உயர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக ரெண்டு பேர் பெண்கள்.

இந்த மேடையே சமூகநீதியின் அடையாளமாக இருப்பதை பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. "என்னரும் தமிழ்நாட்டின் கண் எல்லோரும் கல்விகற்றுப் பன்னறும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமய மலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?" என்று ஏக்கத்துடன் பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அது இந்த நாள்தான்! அதன் அடையாளமாக இருப்பவர்கள்தான் இந்த ஒன்பது மேதைகளும்.

### வழிகாட்டிகளாக ஏற்று முன்னேறுவீர்!

என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் இவர்கள்தான் தங்களுடைய வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டு முன்னேறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## அறிவியல் மேதைகள் 9 பேருக்கு - அரசின் சார்பில் தலா ரூ.25 லட்சம்

மரியாதைக்குரிய டாக்டர் கே.சிவன் அவர்கள் - கன்னியாகுமரி மாவட்டம் சரக்கல்விளை என்ற ஊரில் பிறந்தவர். 1982ஆம் ஆண்டு இஸ்ரோவில் சேர்ந்து - 2018ஆம் ஆண்டு இஸ்ரோ தலைவராக உயர்ந்த ஆற்றலுக்குரியவர். பி.எஸ்.எல்.வி. மூலம் 104 விண்கலங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்தார். ராக்கெட் அமைப்பு தொடர்பாக சித்தாராஎன்ற மென்பொருளை உருவாக்கியவர்.

சந்திரயான்2 முழு வெற்றி அடையாத நிலையில், அவர் கண்கலங்கிய காட்சிகள் தான், ஆற்றிய பணிகள், அதன் மேல் அவர் வைத்திருந்த மாறாத பற்றின் அடையாளமாக வெளிப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது!

மரியாதைக்குரிய மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் - பொள்ளாச்சி அருகில் கோத்தவாடி என்கின்ற கிராமத்தில் பிறந்தவர். 36 ஆண்டுகள் இஸ்ரோவில் பணியாற்றியவர். மூன்றாண்டு காலம் இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையத்தில் திட்ட இயக்குநராக இருந்தவர். பல்வேறு விண்கலங்களை செலுத்துவதில் முக்கியப் பங்காற்றியவர். சந்திரயான்1 வடிவமைப்பில் இந்தியக் கொடியை பொருத்தியவர் இவர். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து விண்ணைத் தொட்டவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள்.

மரியாதைக்குரிய வி.நாராயணன் அவர்கள் - குமரி மாவட்டத்தில் பிறந்தவர். திருவனந்தபுரம் திரவ உந்து சக்தி மையத்தின் இயக்குநராக இருக்கிறார். இஸ்ரோ தயாரித்த பெரும்பாலான ராக்கெட் தயாரிப்புகளில் இவருடைய பங்கு அளப்பரியது. சந்திரயான்3 விண்ணில் செலுத்தப் பயன்படுத்திய மார்க்3 ராக்கெட் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவின் சிறந்த விஞ்ஞானி விருதை இரண்டு முறை பெற்றவர் நாராயணன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஏ.ராஜராஜன் அவர்கள் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிறந்தவர். இஸ்ரோவில் வெளியீட்டு அங்கீகார வாரியத் தலைவராக இருக்கிறார். ககன்யான், எஸ்.எஸ்.எல்.வி. போன்ற இஸ்ரோவுடைய விரிவடைகின்ற தேவைகளுக்கு திடமான மோட்டார்கள் தயாரிப்பதில் இவருடைய பங்கு அளப்பரியது. இஸ்ரோ மெரிட் விருதை 2015ஆம் ஆண்டு பெற்றவர் இவர்.

மரியாதைக்குரிய எம். சங்கரன் அவர்கள் - திருச்சியில் பிறந்தவர். யு.ஆர். ராவ் விண்வெளி மையத்தின் இயக்குநராக பணியாற்றியவர். சந்திரயான் 1,2,3 - ஆகிய மூன்று திட்டங்களிலும் அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றி இருக்கக்கூடியவர். சூரியனை பற்றி ஆய்வு செய்ய இந்தியா அனுப்பிய ஆதித்தியா எல்1 என்ற விண்வெளித் திட்டத்திலும் பணியாற்றியவர். தொழில்நுட்பக் கருவிகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்களில் ஒருவர் நம்முடைய எம்.சங்கரன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஆசீர் பாக்கியராஜ் அவர்கள் - தூத்துக்குடியில் பிறந்தவர். ராக்கெட் எஞ்சின் - விண்கல இயந்திரங்களின் உயர்சோதனைத் துறையில் பெரும் ஈடுபாடு கொண்டவர். ராக்கெட் நிலை ஒருங்கிணைப்புகளில் நவீன வசதிகளை நிறுவியவர். G.S.L.V.யை இவருடைய குழுதான் ஒருங்கிணைத்தது. உயர் தொழில்நுட்பங்களை இணைப்பதில், இவருடைய பங்களிப்பு முக்கியமானது.

மரியாதைக்குரிய டாக்டர் எம்.வனிதா அவர்கள் - சென்னையைச் சேர்ந்தவர். சந்திரயான்2 திட்டத்தின் இயக்குநராக இருந்த பெருமைக்குரியவர். மங்கல்யான் வடிவமைப்பிலேயும் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவில் திட்ட இயக்குநராக பணியாற்றிய முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமைக்குரியவர். சிறந்த பெண் விஞ்ஞானி விருதையும் பெற்றவர்.

மரியாதைக்குரிய டாக்டர் நிகார் ஷாஜி அவர்கள் - தென்காசி மாவட்டம் செங்கோட்டையைச் சேர்ந்தவர். 1987 முதல் இஸ்ரோவில் பணியாற்றி வருகிறார். இஸ்ரோவின் சூரியன் ஆய்வுத் திட்டமான ஆதித்தியா எல் ONE திட்டத்தினுடைய திட்ட இயக்குநராக செயலாற்றினார்.

மரியாதைக்குரிய டாக்டர் வீரமுத்துவேல் அவர்கள் - விழுப்புரத்தில் பிறந்தவர். கடந்த ஆகஸ்ட் 23ஆம் நாள் ஏவப்பட்ட சந்திரயான்3 திட்டத்தின் வெற்றிகரமான இயக்குநர் தான் நம்முடைய வீரமுத்து அவர்கள். "அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை படித்தேன். பள்ளியில் நான் ஒரு ஆவரேஜ் மாணவன். அடுத்து எங்கே படிக்கவேண்டும், என்ன படிக்கவேண்டும் என்று எந்த ஒரு ஐடியாவும் எனக்கு இல்லை. அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினர் யாரும் படித்தவர்கள் இல்லை" என்று சொல்கின்ற அளவுக்கு சாதாரணப் பின்புலத்தில் பிறந்து சரித்திர சாதனையை படைத்திருக்கிறார் வீரமுத்து அவர்கள்.

இதில் தமிழ் இனத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன பெருமை என்றால் சந்திரயான் - 1 திட்ட இயக்குநராக இருந்தவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள். 2008 அக்டோபர் 28ஆம் நாள் அது நிலவை சுற்றத் தொடங்கியது. நிலவில் நீர்க்கூறுகள் இருப்பதை அதுதான் கண்டறிந்து சொன்னது.

சந்திரயான் 2, 2019 ஜூலை 15ஆம் நாள் ஏவப்பட்டது. இதனுடைய திட்ட இயக்குநராக வனிதா செயல்பட்டார். அந்தக் காலக்கட்டத்தில்தான் இஸ்ரோ தலைவராக டாக்டர் சிவன் அவர்கள் இருந்தார்.

இப்போது ஏவப்பட்டது சந்திரயான் 3. இதனுடைய திட்ட இயக்குநர் வீரமுத்துவேல். இதுதான் தமிழ்நாட்டிற்கு கிடைத்த மிகப்பெரிய பெருமை. இந்த பெருமையை தமிழ்நாடு அரசு போற்றும் விதமாக, இரண்டு அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

தொடர்ச்சி 7ஆம் பக்கம்



புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், மேற்கொள்ளப்படும் திட்ட பணிகளை, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் 01.10.2023 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

## தொண்டர் அணி நிர்வாகிகளுக்கான தேர்வு!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



சேலம், அக். 5-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டத்தில் கழக தொண்டர் அணிக்காக 08.10.2023 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த தேர்வு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் காலை 10.00 மணி முதல் பகல் 02.00 மணி வரை நடைபெற உள்ளது. தொண்டர் அணி தேர்வில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும், எழுத படிக்க தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அவசியம் கழக நிர்வாகிகளின் பரிந்துரையோடு இளைஞர்களாக உள்ள கழக தோழர்கள் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## அனைத்து ஊராட்சி மற்றும் வார்டுகளில் பி.எல்.ஏ.2, பி.எல்.சி கூட்டத்தை நடத்திடுவது என தீர்மானம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை. அக்.5-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர்கள் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜித்து(எ) ராஜரெத்தினம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை சோழராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல.சேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி, மூவலூர் மூர்த்தி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். சுவாமிநாதன், பி.சிவதாஸ், எஸ்.வெற்றிவேல், ஜெ.கபிலன், பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன், சங்கரநாராயணன், நத்தம் வின்சென்ட், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், முத்துராஜா, அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, தேசப்பன், முத்து.குபேரன், லதா சுப்பரமணியன், சௌமியன், பெருவீரமணி, வி.எஸ்.என்.செந்தில், விக்கி, இரா.மனோகரன், எஸ்.எம்.சம்சுதீன், இரா.தனராஜ, சாந்தி, எஸ்.தீபா, எஸ்.பாலமுருகன், வைத்தியநாதன், பிரபாகர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், மாவட்ட பிரதிநிதி எஸ்.தென்னரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

கழகத்தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய பகுதியில் உள்ள ஊராட்சிகள் தோறும், நகர, பேரூர் பகுதிகளில் உள்ள வார்டுகள் தோறும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2 மற்றும் பி.எல்.சி. ஆகியோர்களை உள்ளடக்கிய கூட்டம் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் வரும் 27ம் தேதிக்குள் கூட்டம் நடத்திடுவது என்றும், இந்த கூட்டங்களில் அந்த பகுதியை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பபினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக செயலளார்கள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும்,

சென்னையில் அக்டோபர் 14ம் தேதி நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் மகளிர் கலந்து கொள்ள செய்திடுவது என்றும், மகளிர் மாநாட்டிற்கு மகளிர்கள் செல்ல மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியினர் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுடன் நேரில் சென்று கலந்து பேசிட வேண்டும் என்றும், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் தங்கள் பகுதியில் இருந்து எத்தனை மகளிர் சென்னைக்கு செல்கிறார்கள் என்பதை



மாவட்ட கழகத்திடம் முன் கூட்டியே தெரிவித்து அதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்றும்,

வரும் கூட்டுறவு சங்க தேர்தலில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கழகத்தை சேர்ந்தவர்கள் இயக்குநர்களாகவும், தலைவராகவும் தேர்வு செய்திட உடன் அதிக அளவில் உறுப்பினர் சேர்த்திட வேண்டும் என்றும், இந்த பணியில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களோடு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து கழக வெற்றிக்கு பாடுபடுவது என்றும்

டிசம்பர் மாதம் 17ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர் அணியினரை அழைத்து செல்ல இப்போதே பணிகளை தொடங்கி மாநாடு சிறக்க மயிலாடுதுறை மாவட்டம் பெரும் பங்காற்றுவது என்றும்,

கழகத்திற்காக நீண்ட நாள் உழைத்திட்ட கழகம், மற்றும் அரசு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றிய மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மயிலாடுதுறை சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலனுக்கு பெரியார் விருது வழங்கிய கழகத்தலைவர் தளபதி மற்றும் தலைமைக் கழகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு பெரியார் விருது பெற்ற கி.சத்தியசீலனுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும்,

வரும் நாடாளுமன்ற தேர்தலில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெற மயிலாடுதுறை மாவட்டத்தினர் இப்போதே பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத்தலைவர் தளபதி ஆகியோர் ஆட்சியின் மக்கள் நலன் சாதனைகளையும், தற்போது ஒன்றிய அரசின் பிரதமராக உள்ள மோடி ஆட்சியில் வேலையின்மை, பொதுத்துறையை தனியாருக்கு தாரை வார்த்தது, சி.ஏ.ஜி.அறிக்கையின் படி பலஆயிரம் கோடி ஊழல் உள்ளிட்ட வற்றை மக்கள் மத்தியில் திண்ணை பிரச்சாரங்கள் மூலம் ஆதாரத்துடன் எடுத்து கூறி தி.மு.க. வெற்றிக்கு உழைத்திடுவது என்றும்,

இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தும் உள்ளிட்ட பணிகளை செய்திட சிறப்பு முகாம் நடத்திட உள்ளது. கழகத்தை சேர்ந்த புதிய வாக்காளர் பெயர் தேர்தல் மற்றும் இறந்த வாக்காளர்களை நீக்கம், பெயர் திருத்தம் போன்ற பணிகளை கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் 2 ஆகியோர் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்து உரிய படிவங்களை பூர்த்தி செய்து அதிக அளவில் வாக்காளர்களை சேர்க்க வேண்டும் என்றும், புதிய வாக்காளர் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமைக்கு அனுப்பிட மாவட்டக் கழகத்திடம் அந்த பட்டியலை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வழங்கிட வேண்டும் என்றும்

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்தை கழகத்தை சேர்ந்த மாவட்ட ஊராட்சி தலைவர், உறுப்பினர்கள், ஒன்றியக்குழு தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசு பதவியில் உள்ள கழகத்தை சேர்ந்தவர்கள் தங்கள் பகுதியில் உள்ள பள்ளிக்கு சென்று கண்காணித்து மாணவர்களுக்கு தரமான உணவு தொடர்ந்து வழங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில் – கழக

## பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி - கருத்தரங்கம்!

### கு.கருணாநிதி –கே.என்.சேகரன் – நிர்வாகிகள் பங்கேற்பு!





திருச்சி, அக். 5-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட மாநகர பொறியலாளர் அணி சார்பில், மாநில தழுவிய பேச்சு போட்டி மற்றும் கருத்தரங்கம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரியமங்கலம் எஸ்.ஐ.டி. கல்லூரியில் நடைப்பெற்றது.

பொறியியல் மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப் போட்டி மற்றும் "நவீன தமிழ்நாட்டின் ஆர்க்கிடெக்ட்" தலைப்பில் கருத்தரங்கம் நடைப்பெற்றது. மாவட்ட பொறியாளர் அணி தலைவர் இ.தென்னரசு வரவேற்புரை வழங்கினார். மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.ஜியாவுதீன் , மாநகர பொறியாளர் அணி அமைப்பாளர் சி.எம். மெய்யப்பன் தலைமை வகித்தனர் . மாவட்ட மாநகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் த.நடராஜன், கோ.சிபிசக்கரவர்த்தி, ஆர். பாலசுப்ரமணியன், ப.நவநீதகிருஷ்ணன், கோவி. செல்வராஜ், ஆ.அசோக், ஜெ. சாக்ரடீஸ், ஆர். செந்தில்ராம், ஆர்.தினேஷ் கண்ணா, ஏ.மணிகண்டன், ஏ.கிஷோர், எஸ்.ஷாஜஹான் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

திருச்சி தெற்கு மாவட்டத்தை சேர்ந்த இளங்கலை முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், பாலிடெக்னிக் மாணவர்கள் ,ஐடிஐ மாணவர்கள், "மாபெரும் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு கீழ் கண்ட தலைப்புகளில் தொழில் நுட்ப கல்விக்கு தோள் கொடுத்த கலைஞர், தொழில்துறையை உயர்த்திய தமிழின தலைவர், திராவிடம் மாடலும் திறன்மிக்க கல்வியும், தெற்குச்சூரியன், கலைஞரும் தமிழும் மாணவ மாணவிகள் உரையாற்றினார் .

சிறப்பு அழைப்பாளர்கள் பொறியாளர் அணி மாநிலச்செயலாளர் கு.கருணாநிதி அவர்களும், மாநகர கழக செயலாளர் மு. மதிவாணன் அவர்களும், கவிஞர் நந்தலாலா அவர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார் . இந்த நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அணி செயலாளர்கள் கே.என். சேகரன், வண்ணை அரங்கநாதன், அ.த.த. செங்குட்டுவன், என்.செந்தில், பி.ஏ.நூர்கான், ஆறு. சந்திரமோகன், பொன். செல்லையா, வி.சரோஜினி, எம்.தமிழ்ச்செல்வம்,

கே.கே.கே.கார்த்திக், ஆர்.மணிமேகலை, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள்:ஓ. நீலமேகம், கே.எஸ்.எம். கருணாநிதி, எஸ். சிவக்குமார், எம்.பழனியாண்டி, எம்.ஆர்.டி.பி.கே.தங்கவேல் கலந்து கொண்டனர் இறுதியாக மாநகர பொறியாளர் அணி தலைவர் மு. இன்பா நன்றியுரையாற்றினார் .

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

## கழக சட்டத்துறை சார்பில் 2 -வது மண்டல பேச்சுப் போட்டி!

### செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு

சென்னை, அக். 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி 2வது மண்டல பேச்சுப் போட்டி நடைபெறுகிறது. இது குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை யொட்டி தி.மு.க. சட்டத் துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக் குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளைகீழே குறிப்பிட்டள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு : -

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி, 2. கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி,

3. கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்

4. கலைஞரின் பார்வையில் தொழில் வளம்,

5.கலைஞரின் பார்வையில் கல்வி.

மேற்சொன்ன இந்த ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள். அந்தத் தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்டக் கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்த தற்போது 2வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு

ரூபாய் 50,000 - தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், ரூபாய் 15,000/ தாமிரப் பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, "ஆர். கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/ தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/ தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறை இணைச் செயலாளர் சட்டத்துறை துணைச் செயலாளர்) 9840022250, ஜெ.பச்சையப்பன் சட்டத்துறை இணைச் செயலாளர் 98402-60178, கே.சந்துரு சட்டத் துறை இணைச் செயலாளர் 9444006999, கே.ஜே. சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் 9841057345

2 வது மண்டல பேச்சுப் போட்டி போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள் வருமாறு:-

**7.10.2023 (மாணவர்கள்)**

1) அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இடம்), 2). எஸ்.தங்கப்பழம், சட்டக் கல்லூரி, தென்காசி (தனியார்), 3) துளசி பெண்கள் சட்டக் கல்லூரி, தூத்துக்குடி (தனியார்) , முகில், சட்டக் கல்லூரி, கன்னியாகுமரி (தனியார்), கலசலிங்கம் அகெடமி ஆப் ரிசர்ச் & எஜிகேசன், 08.10.2023 (வழக்கறிஞர்கள்)

திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள், இடம் - எல்.எஸ். மகால், ரஹமத் நகர், காமராஜ் நகர், பாளையங்கோட்டை, திரு நெல்வேலி டவுண்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கிருஷ்ணகிரி, அக். 5-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் அவர்கள் தலைமையில் இன்று (05.10.2023) காலை 10.00 மணியளவில் ஒசூர் - தளி சாலையில் உள்ள சென்னீஷ் மஹாலில் நடைபெற உள்ளது. இந்த செயற்குழு கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகிப்பர்.

இந்த செயற்குழு கூட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கிளை செயலாளர்கள், பாகமுகவர்கள்(BLA2) கழக தோழர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. டிசம்பர் 17 இளைஞர் அணி மாநில மாநாடு குறித்து, 2. அக்டோபர் 14, மகளிரணி மாநாடு குறித்து,

3. இளைஞர் அணி இல்லந்தோறும் உறுப்பினர் சேர்த்தல், 4. வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல் குறித்து, 5. BLA2, BLC(பாகமுகவர்கள், வாக்குசாவடி முகவர்கள்) குறித்து 6. கழக ஆக்கப்பணிகள் இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



இன்று (05.10.2023 - வியாழன்) மாலை 04.00 மணியளவில் தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில், மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. 06.10.2023 (நாளை) கழகத்தலைவர் தஞ்சை வருகை.
2. 14.10.2023 சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாடு.
3. வாக்குச்சாவடி பாகமுகவர்கள் பட்டியல் சரிபார்த்தல்.
4. வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல்.
5. கழக ஆக்கப்பணிகள்.

**துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ**
செயலாளர்
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

## எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்களை உருவாக்க

# திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும்!

## கிராம சபைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 5 -**

**எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்களை உருவாக்க திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிராம சபைக் கூட்டத்தில் தொடர்பாக காணொலி வாயிலாக உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**கிராம சபைக் கூட்டத்தில் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:**

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கிற பொதுமக்கள் எல்லோருக்கும் உங்களின் ஒருவனான இந்த மு.க.ஸ்டாலினின் அன்பு வணக்கம்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான், கிராம சபை கூட்டங்களை முறையாக - தடங்கல் இல்லாமல் நடத்தி கொண்டு வருகிறோம்.

கிராமப்புற மக்களுடைய குரல் எப்போதும் எந்தச் சூழலிலும் தடையில்லாமல் ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதுபோல கிராம சபைக் கூட்டங்களை தடையில்லாமல் நடத்துகிறோம்.

**மக்களாட்சி மலர்ந்த உத்திரமேரூர் வட்டாரம்!**

மக்களாட்சி முதலில் மலர்ந்த இடம் கிராமங்கள் தான். காஞ்சிபுரம் பக்கம் இருக்கிற உத்தரமேரூர் வட்டாரம் தான் ஜனநாயகத் தேர்தல் அமைப்பு முறை பிறந்த தொட்டிலாக வரலாற்று ஆசிரியர்களால் சொல்லப்படுகிறது.

உத்திரமேரூர் கல்வெட்டு இதை சொல்கிறது. யாரெல்லாம் தேர்தலில் போட்டியிட இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருடைய பெயரையும் ஓலைச்சுவடியில் எழுதிக் குடத்தில் போடுவார்கள். அந்தக் குடத்தை குலுக்கி ஒரு ஓலையை எடுப்பார்கள். அப்படி எடுக்கப்பட்ட பெயரில் யாருடைய பெயர் பொறிக்கப்பட்டு இருக்கிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார். இதுதான் குடவோலை முறை. இப்படித்தான் தமிழ்நாட்டில் மக்களாட்சி என்ற அமைப்பே மலர்ந்தது.

அந்த வகையில் பார்த்தால் கிராமங்களில்தான் மக்களாட்சி முறையானது முதலில் தோன்றியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, 'கிராம சபை' என்ற அமைப்பு தமிழ்நாட்டை பொறுத்தவரையில், சோழர் காலந்தொட்டே பழக்கத்தில் இருந்து வருகிறது.

சோழப் பேரரசில் 'ஊர் மற்றும் மகாசபை' என்கிற இரு வேறு அவைகள் இருந்தது. இதில் மகாசபையை போன்றதுதான் தற்போதைய கிராமசபை என்று அறியமுடிகிறது. மக்களாட்சியின் ஆணிவேராக இருக்கிற கிராம சபைக் கூட்டங்களில் மக்களே நேரடியாக விவாதித்து, தங்களுடைய தேவைகளையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.



இது இந்திய அளவில் நாடாளுமன்றம், மாநில அளவில் சட்டமன்றம் இருப்பதைப் போல, கிராம அளவில் கிராம சபையானது மக்கள் குரலை எதிரொலிக்கிற மன்றமாக அமைந்திருக்கிறது.

கிராம சபைகள் குறைந்தது ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெற வேண்டும் என்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 குறிப்பிட்டிருந்தாலும், அதை ஆண்டுக்கு நான்கு முறை என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றி அமைத்தார். தற்போதைய திராவிட மாடல் அரசானது, இதை ஆண்டுக்கு 6 முறை கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்று அதிகரித்திருக்கிறோம்.

அதன்படி, ஆண்டொன்றுக்கு முறையே *குடியரசு நாள், *உலக தண்ணீர் நாள், *தொழிலாளர் நாள், *விடுதலை நாள், *காந்தியடிகள் பிறந்தநாள் *உள்ளாட்சிகள் நாள் ஆகிய 6 நாட்களில் கிராம சபை நடைபெற்று வருகிறது.

**கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள்!**

ஒரு அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு அதிகாரம் வழங்க வேண்டும். நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும். கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

*கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அங்கீகரித்தல், *ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும்பணிகளின்முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், *ஊராட்சிகளின் வரவு, செலவினங்களை ஆய்வு செய்தல், *பயனாளிகளைத் தேர்வு செய்தல், திட்டக் கண்காணிப்பு செய்தல் ஆகிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

கிராம சபை ஒன்றுக்கு கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் செலவினம் ஆயிரம் ரூபாயில் இருந்து ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராம சபைகள் பல சிறப்பு செய்கைகளைச் செய்கிற வகையில், நலிந்தோர்க்கும், வறியோர்க்கும் உதவி செய்ய மாற்றுத் திறனாளிகள் நலன், முதியோர் நலன், குழந்தைகள் நலன் போன்றவற்றில் அதீத ஈடுபாடு காட்டிட வேண்டும். கல்விக்காக நம்முடைய அரசு எடுக்கிற முயற்சிகள் எல்லாவற்றிலும் கிராம சபைகள் முக்கியப் பாலமாக இருக்க வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைத்திருக்கிறேன். உங்கள் குழந்தைகள் இப்போது பள்ளிக்கு சென்று, சாப்பிடுகிறார்களா?

தமிழ்நாடு முழுக்க 16 லட்சம் குழந்தைகள் காலை உணவு சாப்பிடுகிறார்கள்! அது மட்டுமல்ல, எண்ணும் எழுத்தும் திட்டம்,

> **சோ**ழப் பேரரசில் 'ஊர் மற்றும் மகாசபை' என்கிற இரு வேறு அவைகள் இருந்தது. இதில் மகாசபையை போன்றதுதான் தற்போதைய கிராமசபை என்று அறிய முடிகிறது. மக்களாட்சியின் ஆணிவேராக இருக்கிற கிராம சபைக் கூட்டங்களில் மக்களே நேரடியாக விவாதித்து, தங்களுடைய தேவைகளையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.
>
> இது இந்திய அளவில் நாடாளுமன்றம், மாநில அளவில் சட்டமன்றம் இருப்பதைப் போல, கிராம அளவில் கிராம சபையானது மக்கள் குரலை எதிரொலிக்கிற மன்றமாக அமைந்திருக்கிறது.

பள்ளி உட்கட்டமைப்புத் திட்டங்கள், இது மாதிரியான திட்டங்களை நீங்கள் மேம்படுத்த உதவி செய்து செயல்படுத்த வேண்டும்.

இன்றைக்கு கிராம சபையில் பங்கெடுத்த நீங்கள், பங்கேற்காத உங்கள் ஊர் மக்களிடம் போய் சொல்லுங்கள், கிராம சபையை ஒரு ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றக் களமாக கருதி கலந்து கொள்ள வேண்டும் என்று.

**ஒட்டுமொத்த வளர்ச்சி பற்றி விவாதிக்க வேண்டும்!**

கிராம சபையில், ஊராட்சிகளுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான கருத்துகளை மட்டுமே விவாதிக்க வேண்டும். ஊராட்சியினுடைய எல்லாப் பகுதிகளும் முழுமையான வளர்ச்சியை அடைய, அங்கே கூடியிருக்கக்கூடிய அலுவலர்களிடத்தில், அவர்கள் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகிற திட்டங்களை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

மகளிர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக அளவில் கலந்துக் கொள்வதை உறுதி செய்ய வேண்டும். கிராமசபையில் அவர்கள் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும். தேர்வு செய்யப்படுகிற பணிகள் பொதுவானதாகவும் எல்லோரும் பயன் பெறும் வகையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். கிராம சபை நடைபெற்ற விவரங்களை குறிக்க, பதிவேடு பராமரித்து, எல்லோருடைய கருத்துகளையும் பதிவு செய்ய வேண்டும்.

*நீர் ஆதாரங்களை வளப்படுத்துதல், *தண்ணீரின் முக்கியத்துவம், *நிலத்தடி நீரினை செறிவூட்டுதல், *நீர்நிலைகளைப் பாதுகாத்தல் - போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

*சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தல், *சுகாதாரம் பேணுதல், *முறையான திட, திரவக் கழிவு மேலாண்மை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதை நிலைநிறுத்துகிற வகையில், எல்லா ஊராட்சி மன்ற தலைவர்களும் மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**ஊரகப் பகுதிகளில் பணப் புழக்கம்!**

*மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது. ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக பயனடைந்து கொண்டு வருகிறார்கள்.

விடுபட்டவர்களும் மேல்முறையீடு செய்யலாம் என்கிற வாய்ப்பை அரசு வழங்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தில் கிராமப்புறப் பெண்கள்தான் அதிகமாக பயனடைகிறார்கள். 1000 ரூபாய் என்பது அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மிகுந்த உதவியாக இருக்கிறது. இன்னும் சொன்னால், ஊரகப் பகுதிகளில் பணப் புழக்கம் அதிகமாக இந்தத் திட்டம் வழிவகை செய்திருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே - மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணம் என்கிற விடியல் பயண வசதியை ஏற்படுத்தித் தந்தோம். இதுவும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த மாணவிகள், உயர்கல்விக்காகக் கல்லூரியில் சேர்ந்தால், அவர்களுக்குப் புதுமைப்பெண் திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம்.

வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து கொண்டு இருப்பதும் நம்முடைய கழக அரசுதான். இதன் மூலமாக, பாசனப் பரப்பும் அதிகமாகி, வேளாண் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு புத்துயிர் வழங்கி, விரிவுபடுத்தி கொண்டு வருகிறோம்.

இப்படியாக, கிராமங்களுடைய - கிராம மக்களுடைய ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சிறப்பு கவனத்தை திமுக அரசு செயல்படுத்தி கொண்டு வருகிறது.

அனைத்துத் துறையும் வளர வேண்டும் - அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும் என்ற இலக்கை வைத்து செயல்பட்டு வருகிறோம். நகர்ப்புறங்கள் மட்டும் வளர்ந்தால் போதாது - கிராமப்புறங்களும் வளர்ந்தாக வேண்டும்.

**ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சிறப்பு கவனம்!**

"ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக - தொழில் வளர்ச்சியாக மட்டும் இருக்கக் கூடாது. சமுதாய வளர்ச்சியாக இருக்க வேண்டும்" என்று நான் அடிக்கடி சொல்லி கொண்டு வருகிறேன்.

அதை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்றால், கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி அடைந்தாகவேண்டும். இதை மனதில் வைத்துதான் எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்தி கொண்டு வருகிறோம்.

இன்று அக்டோபர் 2, அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள். "இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று சொல்லி, 'கிராம சுயராஜ்ஜியம்' எனும் கிராம தற்சார்பு நிலையை எல்லா கிராமங்களும் அடைய வேண்டும் என்று விரும்பினார்.

தற்சார்புள்ள கிராமங்கள் - தன்னிறைவு பெற்ற கிராமங்கள் - எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்கள் - சமூக வளர்ச்சி பெற்ற கிராமங்கள் - ஆகியவற்றை உருவாக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும், உழைக்கும், உழைக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதல் அறிவிப்பு இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிவியல் மேதைகளான இந்த ஒன்பது பேருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், ஒவ்வொரு வருக்கும் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அறிவுக்கான அளவுகோல் எதுவுமில்லை. உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரத்தின் அடையாளமாகதான் தமிழ்நாடு அரசு இந்தத் தொகையை வழங்கியிருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டு, மேலும், மேலும் இந்தியாவிற்கு நீங்கள் பெருமை சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இரண்டாவது அறிவிப்பு என்னோட கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை பற்றி உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டு மாணவர்கள் - இளைஞர்கள் ஏதோ பட்டம் வாங்கினால் மட்டும் போதும் என்று நினைக்காமல் கல்வியில் - அறிவாற்றலில் - சிந்திக்கின்ற திறனில் - பன்முகத் திறமையில் சிறந்தவர்களாக அப்படி உருவாக்கத்தான் நான் முதல்வன் திட்டத்தை தொடங்கி நடத்திக்கொண்டு வருகிறோம்.

சென்ற ஆண்டு மட்டும் 13 லட்சம் பேருக்கு பயிற்சி வழங்கி இருக்கிறோம். 10 இலட்சம் என்று இலக்கு வைத்திருந்தோம். ஆனால் 13 இலட்சம் பேருக்கு பயிற்சி வழங்கியிருக்கிறோம். நம்முடைய மாணவர்களை அனைத்து திறமைகளும் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம்.

**ஆளுமைகள் அதிகமாக உருவாக வேண்டும்!**

பன்னாட்டு நிறுவனங்கள் அதிக அளவில் தமிழ்நாட்டிற்கு தொழில் தொடங்க வருகிறார்கள். அதற்குத் தகுதியானவர்களாக தமிழ்நாட்டு இளைஞர்களை உருவாக்கி வருகிறோம். அதேபோல அறிவியல் திறனுள்ள மாணவர்களையும் உருவாக்க நினைக்கிறோம். அதற்கான அறிவிப்பை இந்த மேடையில் வெளியிடுவது மிகமிக பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

பொறியியல் படிக்கின்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்டுபிடிப்பு ஆர்வத்தை உருவாக்க இந்த திட்டத்தை செயல்படுத்தப் போகிறோம். அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும், 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின் கீழ், அரசின் கல்வி உதவித் தொகை பெற்று இளநிலை பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பை தொடர்கின்ற 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்க இருக்கிறோம். இதன் மூலம் அவர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களும் வழங்கப்படும். அந்த மாணவர்கள், அறிவியலாளர்களின் தலைமையில் அமைக்கப்படுகின்ற குழுக்களால் தேர்வு செய்யப்படுவார்கள். இந்தக் கல்வி உதவித்தொகைக்காக, பத்து கோடி ரூபாயில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் இந்த ஒன்பது பேரை பாராட்டுவது அவர்களை பாராட்டுவது மட்டும் இல்லை, அவர்களைப் போல ஆளுமைகள் இன்னும் அதிகமாக உருவாக வேண்டும் என்று ஊக்கப்படுத்தவும் தான் இந்தப் பாராட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**அறிவியல் மேதைகள் இன்னும் உருவாக வேண்டும்!**

இந்த நிகழ்ச்சியை 58 இலட்சம் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் காண்பதற்கான ஏற்பாடுகளை, நம்முடைய அரசு செய்திருக்கிறது. இதனை பார்த்துக் கொண்டிருக்கும் மாணவ கண்மணிகளே! உங்களை நான் கேட்டு கொள்வது, அறிவியல் ஆர்வத்தையும், ஆளுமைத் திறனையும் நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். இன்றைய மாணவர் சமுதாயத்திலிருந்து - இந்த மேடையில் இருக்கின்ற ஆளுமைகளைப் போன்ற அறிவியல் மேதைகள் உருவாகவேண்டும்! அதுதான் இந்த திராவிட மாடல் அரசின் இலக்கு! அந்த வகையில், இங்கே அமர்ந்திருப்பவர்கள் அறிவியலாளர்களாக மட்டும் இல்லை, அறிவியல் வழிகாட்டிகளாகவும் இருக்கிறார்கள்.

இவர்களுடன் சேர்த்து, பல்லாயிரக்கணக்கான விஞ்ஞானிகள் - அறிவியல் ஆளுமைகள் - திறமைசாலிகளின் கூட்டு முயற்சியால் தான் இவை அனைத்தும் நிகழ்த்திக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைய இஸ்ரோ தலைவர் மரியாதைக்குரிய சோம்நாத் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் அனைத்து அறிவியலாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களால் தான் அறிவியல் துறையில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கிறது. நம்மை விட அதிகமான தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்ற நாடுகளில் இருக்கலாம். ஆனால், அதிகமான தொழில்நுட்ப அறிவுக் கூர்மை கொண்டவர்கள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள்.

பூமிக்கு அப்பால் உள்ள அனைத்து ஆராய்ச்சிகளும் தொய்வின்றித் தொடரட்டும். சூரியன் பற்றியும் - நிலாவை பற்றியும் எல்லா ஆய்வுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறேன்.

மனிதரை விண்வெளிக்கு அனுப்புகின்ற வரை அனைத்து அறிவியல் முயற்சிகளும் வெற்றிகரமாக நடைபெறட்டும். இந்திய நாட்டைக் காப்போம்! நாட்டுக்கு அப்பால் உள்ள உலகத்தையும் கற்போம்! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், தொழில் நுட்ப கல்வி இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் 03.10.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு142, திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய கழிவுநீர் இணைப்பு கால்வாய் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், ரூ.33 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் ஆகியவற்றினை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மத்திய வட்டார துணை ஆணையாளர் எஸ். ஷேக் அப்துல் ரகுமான், மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), இரா.துரைராஜ் (அடையாறு), மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தொண்டாமுத்தூர் ரவி - திப்பம்பட்டி ஆறுச்சாமி பங்கேற்பு!

# கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் தென்னை சிவா அறிக்கை!

கோவை, அக். 5 -

கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா அறிக்கை வருமாறு:

கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கலந்தாய்வு கூட்டம் 7.10.2023 - சனிக்கிழமை அன்று மாலை 3 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி முன்னிலையிலும் கோவை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா ஆகிய நான் வரவேற்புரை ஆற்றவும் இந்தக் கூட்டத்தில் புதிதாக தலைமைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மற்றும் துணைத் தலைவர் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். முடிவில் மாவட்டத் துணை அமைப்பாளர் முரளி நன்றி கூற உள்ளார்.

கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொங்கு மண்டலத்தில் கொண்டாடுவது குறித்தும் நகர, ஒன்றிய, பேரூர்க் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்வது குறித்தும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவரும் தமிழக முதல மைச்சருமான தளபதியார் அவர்கள் செய்திருக்கின்ற மகத்தான சாதனைகளை நமது ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு வீடாக எடுத்துச் சொல்ல திண்ணைப் பிரச்சாரம் மூலம் பிரச்சாரம் செய்வது குறித்தும் விவாதிக்க உள்ளோம்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன் .

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சேலம் செவ்வாபேட்டை வி. சத்தியநாராயணன் தந்தை

# ஜி.வாசுதேவன் படத்திறப்பு நிகழ்ச்சி!

## கழகத்தினர் - உறவினர் பங்கேற்பு!



சேலம், அக். 5 -

சேலம் செவ்வாப்பேட்டை பகுதி முன்னாள் அவைத் தலைவரும், மாரியம்மன் கோவில் முன்னாள் அறங்காவலரும்,செவ்வாப் பேட்டை தி.மு.கழக மூத்த உறுப்பினரும்,முன்னாள் நகர துணைச் செயலாளர் ஜி. செல்வராஜ் தம்பியும், செவ்வாப்பேட்டை வி.சத்தியநாராயணன் தந்தை ஜி.வாசுதேவன் (வயது 83) உடல் நலக் குறைவால் கடந்த 23.09.2023 அன்று மரணமடைந்தார்.


அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளரும் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான இரா. இராஜேந்திரன். எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் ஜி.கே.சுபாஷ் மற்றும் மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், முன்னோடிகள் அண்ணாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அது சமயம் அன்னாரது படத்திறப்பு நிகழ்ச்சி 1.10.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று கதவு எண்.54 சேர்மன் மதுரை தெரு, செவ்வாப்பேட்டை, சேலம் என்ற அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. திருஞானசம்பந்தம்
### அக்டோபர் 5 (1983)



**காளையார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.**

**பாகனேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1968 முதல் 1974 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் கழக உறுப்பினராக பணியாற்றியவர்.**

**1966ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற ஒன்றுபட்ட இராமநாதபுரம் – மதுரை மாவட்டங்களின் கழக மாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1963 முதல் 1965 வரை சிறையிலிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘கழகம் வளர்த்த கருப்பு தங்கம்’ என அப்பகுதி கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### வடகிழக்குப் பருவ மழை:

# சென்னை மாநகராட்சி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## மேயர் ஆர்.பிரியா தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, அக். 5 -

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடுப் பணிகள் குறித்து தொடர்புடைய சேவைத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் நேற்று முன்தினம் (03.10.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் பேரிடர் மேலாண்மை கையேட்டினை மேயர் அவர்கள் வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், பருவமழைக்கு முன்னதாக அவ்விடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும், தென்னக இரயில்வே, தேசிய நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை, மீன்வளத் துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை, பி.எஸ்.என்.எல்., சென்னை மாநகரப் போக்குவரத்து, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம், கடலோரக் காவல் படை, சென்னை வானிலை ஆய்வு மையம் மற்றும் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை, ஆகியவற்றின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

### தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பது-

# ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பது; அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 5 -

தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பது மற்றும் ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான என “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:-

மருத்துவ ஆணையம் (என். எம். சி) என்பது 33 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவின் மருத்துவத் துறையின் ஒழுங்குமுறை அமைப்பாகும். இது, இந்திய மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தும் செயலை மேற்கொள்கிறது. கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி இந்திய மருத்துவக் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது. சமீபத்தில் தேசிய மருத்துவ ஆணையம் வகுத்திருக்கும் புதிய விதிகள், தென் இந்தியாவில் உள்ள மாநிலங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. ஒன்றிய அரசிதழில் ஆகஸ்ட் 16ம் தேதி வெளியிடப்பட்டுள்ள இளநிலை மருத்துவக் கல்விக்கான தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய விதிமுறைகளில், 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிக பட்சமாக 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

அதற்கும் கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ள மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளோ, மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களோ அனுமதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளும், அவற்றில் உள்ள மாணவர் சேர்க்கை இடங்களும் தேவைக்கும் அதிகமாக இருப்பதால், அடுத்த ஆண்டு முதல் புதிய மருத்துவக் கல்லூரிகளை திறக்க தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் மருத்துவக் கல்விக் கட்டமைப்புகளை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய நிலையில் மருத்துவ ஆணையத்தின் புதிய விதி மிகவும் பிற்போக்கானது.



தினகரன்

அக்டோபர் 3, 2023 செவ்வாய்க்கிழமை

கூட்டாட்சிக்கு ஆபத்து

தேசிய மருத்துவ ஆணையம் (என். எம். சி) என்பது 33 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவின் மருத்துவத் துறையின் ஒழுங்குமுறை அமைப்பாகும். இது, இந்திய மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தும் செயலை மேற்கொள்கிறது. கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி இந்திய மருத்துவக் குழுவை ஒன்றிய அரசு மாற்றி அமைத்தது.

சமீபத்தில் தேசிய மருத்துவ ஆணையம் வகுத்திருக்கும் புதிய விதிகள், தென் இந்தியாவில் உள்ள மாநிலங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி

2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கள்தொகை 7.23 கோடி ஆகும். 2021ம் ஆண்டில் இது 7.64 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த மக்கள் தொகைக்கு தமிழ்நாட்டில் அதிக அளவாக 7,640 மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே இருக்க முடியும். ஆனால், தமிழ்நாட்டில் இன்றைய நிலையில், 11,600 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. அதனால், இன்னும் பல ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்க முடியாது. புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, தெலங்கானா ஆகிய தென்மாநிலங்களுக்கும் இதே நிலைதான் ஏற்படும்.

அதிகளவில் மருத்துவர்கள் உருவாக்கப்பட்டால், எதிர்காலத்தில் மருத்துவர்களுக்கு வேலை கிடைக்காது என்பதால் தான் இந்த புதிய கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருப்பதாக தேசிய மருத்துவ ஆணையம் கூறுகிறது. இது அபத்தமானது. தமிழ்நாட்டில் 11,600 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் இருந்தாலும்கூட, அந்த இடங்கள் அனைத்திலும் படிப்பவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் தான் அதிக மருத்துவக் கல்லூரிகள் இருந்தாலும், வட மாநிலங்கள் அனைத்தும் மருத்துவக் கல்வி வழங்குவதில் இன்னும் பின்தங்கி தான் உள்ளன. அங்கு மருத்துவர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.

அதனால், தமிழகத்தில் பயிலும் மருத்துவ மாணவர்கள், பிற மாநிலங்களில் சேவை யாற்றும் வாய்ப்புகளை கருத்தில் கொள்ளாமல் கட்டுப்பாட்டை விதிப்பது அபத்தமானது. ஒரு மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளை திறக்க அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு தான் உண்டு. தேசிய மருத்துவ ஆணையத்துக்கு அந்த அதிகாரம் கிடையாது. இந்த விவகாரத்தில் தேசிய மருத்துவ ஆணையம் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளை விதிப்பதும், அதற்கு ஒன்றிய அரசு உடந்தையாக இருப்பதும் இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானவை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



புதுக்கோட்டை, அக். 5 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

எதிர்வரும் 7.10.2023 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா(ஏசி) திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமையிலும், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அது சமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய , நகர , பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் , அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

# தேனி தெற்கு மாவட்டத்தில் தொடர் கூட்டங்கள்!

## மாவட்டக்கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ., அறிவிப்பு



01.10.2023ஆம் நாள் காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக்கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத்தலைவர் தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற உள்ள 2வது மாநில இளைஞரணி மாநாடு குறித்தும், எதிர்வரும் 14.10.2023ஆம் தேதி கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி,எம்.பி. அவர்களின் ஏற்பாட்டில் சென்னையில் நடைபெற உள்ள மகளிர் உரிமை மாநாடு குறித்தும், பாக வாரியாக இளைஞரணி நிர்வாகிகளை நியமிப்பது குறித்தும், இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர்களை சேர்ப்பது குறித்தும், நவம்பர் மாதம் நடைபெற உள்ள புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்தும், கம்பம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தனசெல்வம் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கரூர் முரளி ஆகியோர் முன்னிலையில் மாவட்டக்கழக செயலாளரான எனது தலைமையில் பட்டியலில் கண்டவாறு ஒன்றிய, நகர, பேரூர் கழக கூட்டங்கள் நடைபெற உள்ளன. இந்த கூட்டத்தில் அந்தந்த பகுதிகளில் உள்ள மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | நாள், நேரம் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 1 | 04.10.2023 புதன் காலை 10.00 மணி | கம்பம் வடக்கு மற்றும் கம்பம் தெற்கு நகரம் | CNR மீட்டிங் ஹால், கம்பம் |
| 2 | 04.10.2023 புதன் காலை 11.00 மணி | க.புதுப்பட்டி பேரூர் மற்றும் அனுமந்தன்பட்டி பேரூர் | கே.எம்.பி.எல். மீட்டிங் ஹால், க.புதுப்பட்டி. |
| 3 | 04.10.2023 புதன் மாலை 04.00 மணி | உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் | சமுதாயக்கூடம், பண்ணைப்புரம் |
| 4 | 05.10.2023 வியாழன் காலை 09.00 மணி | ஆண்டிபட்டி கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியம் | ஆவுடையாச்சி மஹால், ஜக்கம்பட்டி. ஆண்டிபட்டி |
| 5 | 05.10.2023 வியாழன் மாலை 04.00 மணி | சின்னமனூர் நகரம் | C.R. மீட்டிங் ஹால் சின்னமனூர். |
| 6 | 05.10.2023 வியாழன் மாலை 06.00 மணி | சின்னமனூர் ஒன்றியம் | கவிப்பிரியா மஹால், ஓடைப்பட்டி ரோடு, சின்னமனூர் |
| 7 | 06.10.2023 வெள்ளி மாலை 03.00 மணி | கடமலை-மயிலை வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் | பத்திரகாளியம்மன் கலையரங்கம், கடமலைக்குண்டு |
| 8 | 06.10.2023 வெள்ளி மாலை 05.00 மணி | கம்பம் ஒன்றியம் | P.P.S.மஹால் காமயகவுண்டன்பட்டி |
| 9 | 06.10.2023 வெள்ளி மாலை 06.00 மணி | கூடலூர் நகரம் | K.S.மஹால் கூடலூர் |
| 10 | 07.10.2023 சனி காலை 10.00 மணி | உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம் | R.D.M.மஹால் அணைப்பட்டி |

**கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.

## மாவட்டம் - மாநகரத்தை பாதுகாப்பானதாகவும் அமைதியாகவும் பாதுகாத்து

# நமது அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தாருங்கள்!

### மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவுரை!

**சென்னை, அக்.5-**

**சென்னை-தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், நேற்று முன்தினம் (3.10.2023) நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மாவட்டம், மாநகரத்தை பாதுகாப்பானதாகவும், அமைதியாகவும் பாதுகாத்து, நமது அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தாருங்கள்!" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை வருமாறு:-

காலை முதல் பல்வேறு கருத்துக்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமையும் சாதனையும் - சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதுதான். அமைதியான மாநிலத்தில்தான் அனைத்துத் துறைகளும் வளரும். நான் அடிக்கடி வலியுறுத்துவது - குற்றங்களைக் குறைத்துவிட்டோம் என்பதாக அல்லாமல், குற்றம் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்பதாக தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

**நம்பிக்கையைக் காப்பாற்றுவதே நல்ல அரசின் அடையாளம்!**

பாதிக்கப்பட்டவர்கள் பக்கமாக, எளியோர் பக்கமாக காவல் துறை இருக்க வேண்டும். இந்த அரசு நலிந்தோர், வறியோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் நாடக்கூடிய அரசாகும். ஒரு சாமானியர் தன்னுடைய விண்ணப்பம், புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் காவல் நிலையத்தை நாடுகின்றார் என்றால், அந்த நம்பிக்கையினைக் காப்பாற்றுவதுதான் ஒரு நல்ல ஆட்சியின் அடையாளம்.

ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் புகார் கொடுக்க வரும் மனுதாரர்களைக் கனிவுடன் நடத்துவதற்கும், அவர்களுக்கு வழிகாட்டவும் வரவேற்பாளர் பணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வரவேற்பாளர்களை, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியை மட்டுமே செய்யச் சொல்ல வேண்டும். இவர்களை மற்ற பணிகளுக்காகப் பயன்படுத்துவதாக எனக்குத் தெரிய வருகிறது. அது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களும், புகார்களும் இணையதளத்தில் பதிவுசெய்யப்பட்டு, அதற்கான ஒப்புகைச் சீட்டு மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அனைத்து காவல்துறை ஆணையர்களும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் குறை கேட்கும் கூட்டம் நடத்த வேண்டும் என்று கடந்த ஆண்டு நான் ஆணையிட்டேன். அன்றைய தினம் நீங்கள் மனுதாரர்களிடம் இருந்து நேரடியாக மனுக்களைப் பெற வேண்டும்.

**பிரச்சினையை முழுமையாக அறிந்து முற்றுப்புள்ளி வைத்திடுவீர்!**

ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து அதிக மனுக்களோ அல்லது திரும்பத் திரும்ப ஒரே பொருள் குறித்து தொடர்ந்து மனுக்களோ வரும் நிலையில் அந்தக் காவல் நிலையங்களுக்கு நீங்களே நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். காரணத்தைக் கண்டறிந்து அதனுடைய பிரச்சினையைப் புரிந்து, அதனை முழுமையாகத் தடுத்து, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அரசு வழக்கறிஞர்கள், அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், உதவி இயக்குநர்/இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வுத் துறை உள்ளிட்ட சட்ட அலுவலர்களுடன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டும். ஃபோக்சோ வழக்குகளில் தடய அறிவியல் துறையின் ஆய்வறிக்கை மிக முக்கிய ஆதாரம் என்பதால் அதனை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல்துறைத் துணைத்தலைவர்கள் (DIG) மாதத்திற்கு ஒரு முறையும், மண்டல காவல்துறைத் தலைவர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும் அனைத்து வழக்குகளின் நிலை குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்.

நிலுவையில் உள்ள அனைத்து பிடியாணைகளையும் நிறைவேற்றி சட்டம் ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவிப்போரைக் கைது செய்து, தேவைப்பட்டால், பொது அமைதியை நிலைநாட்ட குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுத் தந்தால் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆகையால், காவல் துறை ஆணையர் / மாவட்டக் கண்காணிப்பாளர்கள் இதனை மாதந்தோறும் ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

நிலுவையில் உள்ள அனைத்து மனுக்கள், விசாரணை அதனுடைய இனங்கள், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டிய இனங்கள் ஆகியவற்றை காவல் நிலையங்களுக்கே சென்று ஆய்வு செய்வதோடு, அதன் தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் பெரிய அளவில் அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதுமின்றி சட்டம் ஒழுங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

சாதிமத பூசல்கள் சிறிய அளவில் ஏற்படும் நிலையிலேயே கண்டறியப்பட்டு, முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

சட்டம் - ஒழுங்கு மற்றும் சாதி உணர்வுகளைத் தூண்டக்கூடிய பிரச்சினைகளில் கவனமுடன், மாவட்ட நிர்வாகத்திற்குக் கீழான அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து சுமூகமான முறையில் தீர்வு காண வேண்டும்.

**சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட உரிய நடவடிக்கை!**

அடுத்து வரும் ஏழு, எட்டு மாதங்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டிய காலம். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் காவலர் முதல் காவல்துறை உயரதிகாரிகள் வரை மிக எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும்.

சமூக ஊடகங்களின் நிகழ்வுகளையும் கண்காணித்து வரவேண்டும்.

அமைதி மற்றும் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இன்று விவாதிக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவரும், தங்கள் பொறுப்பினை உணர்ந்து, உங்களுடைய மாவட்டத்திற்குச் சிறந்த தலைமையாகச் செயல்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தங்கள் மாவட்டம் / மாநகரத்தைப் பாதுகாப்பானதாகவும், அமைதியானதாகவும் பாதுகாத்து நமது அரசிற்கு நற்பெயரை ஈட்டித் தாருங்கள் என்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசுத் துறைச் செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அண்ணல் மகாத்மா பிறந்தநாளில் - வெறுப்புணர்வை ஒழித்து-

# 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக். 5-

நமது தேசத் தந்தை காந்தியாரின் பிறந்த நாளில், அவரது தியாகத்தை நினைவுகூர்ந்து, வெறுப்புணர்வை ஒழித்து - எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155வது பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அரையாடை அணிந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்ற போராளி! வெறுப்புணர்வுக்கு எதிராக ஒற்றை மனிதராக நின்று சமூகத்தில் அமைதி மலரப் பாடுபட்டவர்!**

**அவரது வாழ்வின் பொருளை உணர்த்தவே, இந்த நாட்டிற்கே 'காந்தி தேசம்' எனப் பெயரிட வேண்டும் எனத் தந்தை பெரியார் வலியுறுத்தினார்.**

**அண்ணல் என்றும் மகாத்மா என்றும் இந்த நாடும் பாரும் போற்றும் நமது தேசத் தந்தை காந்தியாரின் பிறந்தநாளில், அவர் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவரது இலட்சியப் பாதையில் வெறுப்புணர்வை ஒழித்து, எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தி, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் காந்திய இசை பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




வண்டலூர் உயிரியல் பூங்காவில் நடைபெற்ற வன உயிரின வார விழா தொடக்க விழாவில், பூங்காவின் சிங்கம் மற்றும் மான் உலாவிடங்களுக்கு பார்வையாளர்கள் செல்லும் சேவையை வனத்துறை அமைச்சர் ம.மதிவேந்தன் தொடங்கி வைத்தார். ஜி.செல்வம் எம்.பி., செங்கல்பட்டு எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலாளர் சுப்ரியா சாஹு, வனத் துறை தலைவர் சுப்ரத் மஹாபத்ரா, தலைமை வன உயிரின காப்பாளர் சீனிவாஸ் ரெட்டி, உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவன இயக்குநர் ஏ.உதயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## பெருந்தலைவர்

# காமராசரின் அளப்பரிய பணிகளை நினைவுகூர்வோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக்.5-

அக்.2-பெருந்தலைவர் காமராசரின் நினைவு நாளில், அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளை நினைவுகூர்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**விடுதலை இந்தியாவில் தொடக்கக் கல்விக்கான மிக வலிமையான அடித்தளத்தைத் தமிழ்நாட்டில் அமைத்த முன்னோடி முதலமைச்சரும், மிகச் சிறந்த காந்தியப் பற்றாளருமான பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவுநாளில் விடுதலைப் போராட்ட வீரராகவும் அரசியல் தலைவருமாக அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## வன உயிரின வார விழா!

# வண்டலூர் உயிரியல் பூங்காவில் சிங்கம், மான் உலாவிடங்களுக்கு செல்லும் சேவை!

### அமைச்சர் ம.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, அக்.5-*

*வண்டலூர் உயிரியல் பூங்காவில் நடைபெற்ற வன உயிரின வார விழா தொடக்க விழாவில், பூங்காவின் சிங்கம் மற்றும் மான் உலாவிடங்களுக்கு பார்வையாளர்கள் செல்லும் சேவையை வனத் துறை அமைச்சர் ம.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாடு வனத்துறை சார்பில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் வன உயிரின வார விழா தொடக்கப்பட்டது. வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன் பங்கேற்று விழாவைத் தொடங்கிவைத்தார். பூங்காவில் சிங்கம் மற்றும் மான்கள் உலாவிட பகுதிகளுக்குப் பார்வையாளர்கள் செல்வதற்கான ஏசி பேருந்து வசதி, கியூஆர் குறியீடு மூலம் நுழைவுச் சீட்டு பெறும் வசதி ஆகியவற்றை தொடங்கிவைத்தார். பின்னர், பூங்காவின் வன விலங்கு மருத்துவமனையில் புதிய அறுவை சிகிச்சை அரங்கைத் திறந்துவைத்தார்.*

*பின்னர், முதுமலை புலிகள் காப்பகத்துக்கான புதிய இணையதளத்தையும் அமைச்சர் திறந்துவைத்தார். இந்த இணையதளம், காப்பகங்கள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதுடன், ஓய்வு இல்லங்கள் மற்றும் வனச்சுற்று போன்ற வசதிகளை ஆன்லைனில் பதிவு செய்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.*

*முதுமலை புலிகள் காப்பகத்தில் நினைவுப் பொருட்களை ஆன்லைனில் வாங்கும் வகையில் புதிய இணையதளத்தையும் அவர் தொடங்கி வைத்தார். விழாவில், 'கழுவேலி மற்றும் உசுடு பறவைகள் சரணாலயங்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டது.*

*வண்டலூர் பூங்காவில் சிங்கம் மற்றும் மான் உலாவிடம் 147 ஏக்கர் பரப்பளவில் புதர் காடுகளுடன் அமைந்துள்ளது. கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு சிங்கம் மற்றும் மான் உலாவிடம் மூடப்பட்டது. இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த உலாவிடத்தில் 3 ஆண், 4 பெண் என 7 சிங்கங்கள் உள்ளன. பன்னர் கட்டா மற்றும் லக்னோ உயிரியல் பூங்காவிலிருந்து 2 சிங்கங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மான் உலாவிடப் பகுதியில் ஏராளமான கடமான், புள்ளி மான் மற்றும் கேளையாடு மான்கள் உள்ளன.*

*இவ்விழாவில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி.செல்வம் எம்.பி., செங்கல்பட்டு எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலாளர் சுப்ரியா சாஹு, வனத் துறை தலைவர் சுப்ரத் மஹாபத்ரா, தலைமை வன உயிரின காப்பாளர் சீனிவாஸ் ரெட்டி, உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவன இயக்குநர் ஏ.உதயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*



# இடம் பொருள் கலைஞர் 38

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மேல்நிலைப் பள்ளிகளில் கணினி!.**



# மேல்நிலைப் பள்ளிகளில் கணினி!

## தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படை

*“அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டை 100 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள மாநிலமாக மாற்றுவதோடு மட்டும் நாங்கள் மனநிறைவை அடையப் போவதில்லை. எங்கள் குறிக்கோள் இதைவிடவும் அதிகமானது. அடுத்த 10 ஆண்டுகளில் எங்கள் மாநிலத்தில் உள்ள அனைவரையும் கணினியைப் பயன்படுத்த அறிந்தவர்களாகச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் விருப்பமாகும். எனவே, அடுத்தக் கல்வி ஆண்டில் இருந்து பள்ளி, கல்லூரிப் படிப்பில் தகவல் தொழில்நுட்பவியலை ஒரு பாடமாக வைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்” என்று 1998-ஆம் ஆண்டு செப்டம்பர் 4-ஆம் தேதி, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்பத் தொழிலதிபர்களின் கூட்டத்தில் அறிவித்தார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்.*

*ஆனால், அப்படி ஓர் அறிவிப்பை, ’எடுத்தேன் கவிழ்த்தேன்’ என்கிற விதத்தில் அவர் வெளியிட்டு விடவில்லை. அதைச் சொல்வதற்கு அவரிடத்தில் அழுத்தமான காரணங்கள் இருந்தன.*

*புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிவிக்கப் பட்டவுடன், உலக நாடுகளுக்கான மிகச் சிறந்த சந்தையாக 90-களில் இந்தியா உருவெடுத்தது. அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டது தமிழ்நாடு. அப்போது அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்பவியல் நிறுவனம், திருச்சி பிராந்தியப் பொறியியல் கல்லூரி மற்றும் சில தனியார் பொறியியல் கல்லூரிகள் மட்டுமே தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்புடைய பாடங்களை வழங்கி வந்தன. அதன் காரணமாக, ஆண்டுதோறும் 13 ஆயிரம் தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் வெளிவந்தனர்.*

*இதனால், தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பம் சீரான வளர்ச்சியைக் கண்டு வந்தது. 1994-1995 - இல் மென்பொருள் ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்கு 36 கோடி ரூபாய் என்கிற அளவில் இருந்து, 1997-1998-இல் 425 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்தது. கணினி ஹார்டுவேர் சாதனங்களை 750 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு ஏற்றுமதி செய்திருந்தது. அந்த சமயத்தில் தமிழ்நாட்டிலிருந்த மென்பொருளாளர்களின் எண்ணிக்கை வெறும் 22 ஆயிரம் மட்டும்தான். ஆனால், அப்போதே அது இந்திய அளவில் மிக அதிகமான எண்ணிக்கையாக இருந்தது.*



*இவ்வாறு பலமாக இருந்த தொழில்துறைக்கு மட்டுமல்லாமல் கல்விக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளின் மூலம், தகவல் தொழில்நுட்பத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணிக்கு வரமுடியும் என்ற நோக்கத்தில்தான், கலைஞர் மேற்கண்ட அறிவிப்பைச் செய்தார்.*

### 360 டிகிரி முன்னேற்பாடு

*மேற்கண்ட அறிவிப்பைச் செய்வதற்கு முன்னும் பின்னும் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை, கொஞ்சம் திரும்பிப் பார்த்தால், அவர் போன்ற தொலைநோக்குடன் இருந்த தலைவர்கள் இனி பிறப்பார்களா என்று சந்தேகம் தோன்றும்.*

*1996-இல் ஆட்சிக்கு வந்ததும், 1996-1997-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், கம்ப்யூட்டர் வளர்ச்சி தடைபட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் கம்ப்யூட்டர் கருவிகளுக்கு முந்தைய ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த 12 சதவிகித வரியை நான்கு சதவிகிதமாகக் குறைத்து பொருளாதார அளவிலே கணினிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார் கலைஞர்.*

*பிறகு 1997-1998-இல் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் ‘டானிடெக்’* **(தமிழ்நாடு இன்ஸ்டிட்யூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி - TANITEC)** *என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் மூலம் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், மென்பொருள் மற்றும் வன்பொருள் பொறியியல், மல்டிமீடியா, டிஜிட்டல் டெக்னாலஜி போன்ற படிப்புகள் வழங்கப்பட்டன. அதே 1997-இல் தகவல் தொழில்நுட்பக் கொள்கையும் வகுக்கப்பட்டது. பிறகு, 1998-99-ஆம் ஆண்டு 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.352.08 இலட்சம் செலவில் கணிப்பொறி வழங்க உத்தேசிக்கப்பட்டது.*

*கல்லூரி அளவில், அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் இளம் அறிவியல் கணிப்பொறி (பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ்) பாடத்தினை ஒரு பாட வகுப்பாகத் தொடங்கி, படிப்படியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. 1998- ஆம் ஆண்டிலேயே 25 அரசு கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன. 1998-1999-ஆம் ஆண்டு கூடுதலாக 10 கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடவகுப்பு தொடங்க உத்தேசிக்கப் பட்டது.*

*தொழில்துறை அளவில், இந்தியாவிலேயே முதலாவது தகவல் தொழில்நுட்ப மையமாக அமைந்த* **‘டைடல் பார்க்’** *தொடர்பான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டன. சமூக அளவில், 1998-இல் மாநிலத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் சுமார் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்களை அமைத்திட, இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னோடியாக விளங்கிய* **சாம் பிட்ரோடா** *தலைவராக இருந்த ‘வேர்ல்டு டெல்’ நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டது.*

*பண்பாட்டு அளவில், 1999-ஆம் ஆண்டு பிப்ரவரியில்,* **‘தமிழ்நெட்- 99’** *என்ற தலைப்பில், உலகத் தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது. அதில் தமிழ் கீ-போர்ட், தமிழ் எழுத்துருக்கள் தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.*

> 1996 செப்டம்பர் 30 அன்று தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத் துறையில் இணையப் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, அமைச்சர் தமிழ்க்குடிமகன், கலைஞருக்கு தமிழில் மின்னஞ்சல் செய்தார். அதற்கு கலைஞரும் மின்னஞ்சலில் தமிழில் வாழ்த்தினார். இவ்வாறு வளர்ந்து வந்த தகவல் தொழில்நுட்பத் துறையில் தன்னையும் இணைத்துக் கொண்டார் தலைவர்.

### வளர்ச்சிக்கான அறிவிப்பு!

*இப்படி ஒரு பலமான அஸ்திவாரத்தை எழுப்பிய பிறகு, 1999- 2000-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மிக முக்கியமான ஓர் அறிவிப்பைச் செய்தார் கலைஞர்.*

*“பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் விழைவாகும். நிபுணர்களின் கருத்துகள் அடிப்படையில் பாடமுறையை உருவாக்கி, கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம், கணினிகளை நிறுவி, மாநிலம் முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12 வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் வரும் கல்வியாண்டில் இருந்து தொடங்கப்படும். இதனால், ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 மாணவர் என்ற அடிப்படையில், சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்” என்று அறிவித்தார்.*

*தொடர்ந்து, 1999-ஆம் ஆண்டு அக்டோபர் 5 அன்று, 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி மையங்கள் தொடங்கப்பட்டன. இதை அன்றைய குடியரசுத் துணைத்தலைவர் கிருஷ்ணகாந்த் தொடங்கி வைத்தார். சுமார் 112 கோடி ரூபாயில் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், இந்த மையங்களைத் தொடங்கி வைத்து உரையாற்றிய கலைஞர் இப்படிச் சொன்னார்:*

*“இப்போது சில பள்ளிக்கூடங்களிலே கரும்பலகையே இல்லை. கணினி வேறா என்று யாராவது கேட்கக் கூடும். கணினிதான் இனிமேல் கரும்பலகைகளாக மாறும்”.*

*எவ்வளவு சத்தியமான வார்த்தைகள். இன்று தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகள் ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகளாக மாறி வருவதற்கு கலைஞர் போட்ட அடித்தளம்தான் காரணம் என்பது வரலாற்று உண்மை..!*

**...வலம் வருவோம்**


## சாதாரண தொண்டரும் மதிக்க மாட்டார்!

“பா.ஜ.க. மாநிலத்தலைவர் பதவியில் இல்லாவிட்டால் சாதாரண தொண்டனாக பா.ஜ.க.வில் தொடர்வீர்களா?” என ஒரு பத்திரிகையாளர் கேட்டார். அண்ணாமலையிடம் கேட்கப்பட்ட சிறந்த கேள்விகளுள் ஒன்று அது! இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக அந்தப் பெண் பத்திரிகையாளரை மிக மோசமாக அவமதித்திருக்கிறார், கிரிமினல் அரசியல்வாதி அண்ணாமலை.

சுற்றி நின்ற எந்தப் பத்திரிகையாளரும் இந்தக் கேள்வியில் என்ன தவறு இருக்கிறது. சரியான கேள்விதானே என்று சொல்லவில்லை. அண்ணாமலை போன்ற அடிப்படை சமூக அறிவற்றவர்கள் பொது வெளியில் குறிப்பாக, பத்திரிகையாளர்களிடம் அடாவடியாக நடந்து கொள்வதற்கு காரணம் மொத்த ஊடகங்களும் **‘மோடி மீடியா’**வாக மாறிப் போனதும், கனிமம், கல்வி போன்ற வணிகங்களில் ஈடுபடுவோர் தங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொள்ள ஊடக நிறுவனங்களை நடத்துவதுமே காரணம்.

இப்போது இந்தக் கேள்வியைக் கேட்டவர் பணியில் இருக்கிறாரா எனத் தெரியவில்லை. அண்ணாமலை தலைவரான பின்னர் பல சீனியர்களை ஓரம் கட்டியதோடு தன் கைத்தடிகளை மட்டுமே கட்சியில் வைத்து, அடாவடி செய்து கொண்டிருந்தார். அவர் பதவியில் இல்லாவிட்டால், தொண்டனாக அவரை எவரும் மதிக்கமாட்டார்கள் என்கிற யதார்த்தமான உண்மையை இந்தக் கேள்வி உடைத்துக் காட்டுகிறது. **-பத்திரிகையாளர் அருள் எழிலன் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்



### குளிக்கச் செல்லும் பெரியார்!



அசோகன்

1956-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம், துறையூரில், இந்தித் திணிப்பை எதிர்த்தும் ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடரவும் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அப்போது, திருச்சிக்கு வருகை தந்த பெரியார், ஆசிரியராக இருந்த என் தாத்தாவைச் சந்தித்து, எங்களுடைய வீட்டில் தங்கியிருந்தார். இருவரும் நீண்ட நாள் நண்பர்களாகவும் இருந்தார்கள். வீட்டில் தங்கியிருந்த சமயத்தில் குளியலறைக்குச் செல்லும் வழியை என் தாத்தா திரு.பெருமாள் அவர்கள் பெரியாரிடம் காட்டும்போது இந்தப் படம் எடுக்கப்பட்டதாக என் குடும்பத்தினர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். மிகவும் அரிய இந்தப் படத்தைக் கவனமாகப் பாதுகாத்து வருகிறேன்.

**-வெ.அசோகன், முன்னாள் வங்கி ஊழியர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### குலக்கல்விக்கு எதிராகப் போராட்டம்!

**1952-ஆம் ஆண்டு, சென்னை திருவான்மியூரில், ‘சலவைத் தொழிலாளர் மாநாடு’ நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அப்போதைய முதலமைச்சர் இராஜாஜி, தமிழ்நாட்டில் ‘குலக்கல்வி திட்டம்’ கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட்டார். “அவரவர் சாதித் தொழிலை அவரவர் செய்ய வேண்டும். எல்லா சாதியினரும் படிக்கவேண்டும் என்றால் – அத்தனை பேருக்கும் உத்தியோகம் எங்கே இருக்கிறது. ஆதலால், சாதி முறைதான் நல்லது” என்றார். அதன் பின்னர் கிராமப்புறங்களில் 6 ஆயிரம் பள்ளிக்கூடங்களையும் இழுத்து மூடினார். இந்தத் திட்டத்துக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தார் தந்தை பெரியார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 260




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131